விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆவணி 17 திங்கட்கிழமை (02.09.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 257

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

# நவநீதம்பிள்ளை கவலை பிரித்தானியா கவனம்

## அமைச்சர் அலிஸ்டயர் தெரிவிப்பு



ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை தொடர்பாக எழுப்பியுள்ள கவலைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் அலஸ்டயர் பேர்ட் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை ஆணையாளரின் கவலைகள், இலங்கை நாட்டில் நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான நோக்கங்களை இன்னும் நிறைவேற்ற வில்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நேற்றுமுன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தனது இலங்கை விஜயத்தின் போது ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பில் தெரிவித்திருந்தமை குறித்து கருத்து வெளியிடும்போதே பிரித்தானிய அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இராணுவம் கீழ்மட்ட சிவில் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளமை தனக்கு கவலையளிப்பதாகவும் விவசாயம், கல்வி மற்றும் சுற்றுலாத்துறையிலும் கூட இராணுவத்தின் தலையீடுகள் இருப்பதாகவும் நவநீதம்பிள்ளை கூறியிருந்தார்.

தனியார் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளமை, (20ஆம் பக்கம் பார்க்க)

## துவாரகேஸ்வரனின் அலுவலம் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் வட மாகாண சபைத் தேர்தலில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடும் தியாகராஜா துவாரகேஸ்வரனது கட்சி அலுவலகம் தாக்கப்பட்டுள்ளது.

காரை (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி 15ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண சபைக்காக நடை பெறவிருக்கும் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றுவதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இம் மாத நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கு வர விருப்பதாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்திருக்கின்றார்.

மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர்களை ஆதரித்து வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் நடைபெறும் பரப்புரைக் கூட்டங்களில் ஜனாதிபதி கலந்துகொண்டு உரை நிகழ்த்தவிருக்கின்றார் எனவும் சுசில் பிரேமஜய்ந்த தெரிவித்தார்.

இம்மாதம் (19ஆம் பக்கம் பார்க்க)

## வடக்குக்கு வருகை தரும் இந்திய புலனாய்வாளர்கள்

### வன்னிக் கட்டளைத் தளபதி எச்சரிக்கை

(கிளிநொச்சி)

வர்த்தகர்கள் என்ற பெயரில் வடக்குக்கு வருகை தரும் இந்தியப் புலனாய்வு அதிகாரிகள், வடக்கின் நிலைமைகளைப் புலனாய்வு செய்து வருவதாக சந்தேகம் எழுந்துள்ளது என இராணுவத்தின் வன்னிக கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

அத்துடன் இவ்வாறு நாட்டுக்குள் பிரவேசிக்கும் வெளிநாட்டவர்கள் அரசாங்கத்துக்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுக்க நேரம் பார்த்துக் கொண்டிருப்பதாக அவர் கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களைக கொண்டுள்ள வெளிநாட்டுப் பிரஜைகள் பலர் அன்றாடம் ஓமந்தை சோதனைச் சாவடியைக் கடந்து வடக்கு நோக்கிச் செல்கின்றனர். இவ்வாறு நாட்டுக்குள் உட்பிரவேசிக்கும் (19ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா ஆணையாளரின் கருத்து நடுநிலையானது

## ஜெனிவாவுக்கான முன்னாள் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை வெளியிட்டுள்ள கருத்துக்கள் நடுநிலையானவை. அவர் இம்முறை போர்க்குற்றம் என்ற மந்திரத்தை உச்சரிக்கவில்லை என்றும் ஜெனிவாவுக்கான முன்னாள் தூதுவரும் இராஜதந்திரியுமான கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்த நவநீதம்பிள்ளை கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் வெளியிட்டிருந்த கருத்துக்கள் தொடர்பில் தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

விடுதலைப்புலிகள் அமைப்பு தீவிரவாத அமைப்பு எனவும் அந்த அமைப்புக்கு ஐக்கிய நாடுகள் அமைப்பில் எந்த உதவியும் கிடைககாது எனவும் நீலன் திருச்செல்வத்தைக் கொலை செய்தது புலிகள்அமைப்புஎனவும்மனித உரிமை ஆணையாளர் (20ம் பக்கம் பார்க்க)

## மாவோயிஸ்ட்டுகளுடன் புலிகளுக்குத் தொடர்பு

### அதன் தலைவர் புஷ்ப கமல் அறிவிப்பு

(காத்மண்டு)

நேபாளிலுள்ள மாவோயிஸ்ட் தீவிரவாதிகள், தமிழீழ விடுதலைப புலிகளுடன் தொடர்புகளைப் பேணி வந்ததாக அத்தீவிரவாத இயக்கத்தின் தலைவர் புஷ்ப கமல் அறிவித்துள்ளார்.

நேபாளில் கடந்த ஒரு தசாப்த காலமாக முன்னெடுக்கப்பட்ட பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனது (19ஆம் பக்கம் பார்க்க)

வட மாகாண சபைத் தேர்தல் – 2013



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)
யாழ் மாவட்ட வேட்பாளர்
சீ.வீ.கே.சிவஞானம்
பட்டயச் செயலாளர்
ஓய்வுநிலை மாநகர ஆணையாளர்
துணைப் பொதுச்செயலாளர் - இ.த.அ.க



X 8

சலுகைக்கு முடிவும்
உரிமைக்கு விடிவும்!!!

ஐக்கிய தேசியக் கட்சி



தியாகராஜா
துவாரகேஸ்வரன்
வடமாகாண சபை
முதலமைச்சர் வேட்பாளரும்
முதன்மை வேட்பாளரும்



X 5

# எல்லை கடந்து மீன்பிடிக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் தேவை

## ஜனாதிபதியிடம் கோரினார் அழகிரி

இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதியளிக்கும் அதே வேளை, இலங்கை மீனவர்கள்இந்திய கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிக்கும் இருநாடுகளுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்று இந்திய காங்கிரஸ் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் கே.எஸ்.அழகிரி, இலங்கை ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவரது இந்த கோரிக்கையை இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கினூடாக இலங்கை அரசுக்கு தெரியப்படுத்தும்படியும் தாமும் இது குறித்து இலங்கை அரசின் ஏனைய முக்கியஸ்தர்களுடனும் இலங்கை மீனவர்களிடமும் கலந்துபேசுவதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தன்னிடம் தெரிவித்ததாகவும் கே.எஸ்.அழகிரி தெரிவித்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் நிறுவுனர் சௌமியமூர்த்தி தொண்டமானின் நூற்றாண்டுவிழாவில் கலந்து கொள்வதற்காக அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் அழைப்பின் பேரில் இலங்கை வந்த அழகிரி இந்நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் மேற்கண்டவாறான கோரிக்கையை முன் வைத்ததாக கூறியுள்ளார்.

எல்லை தாண்டிவந்து மீன்பிடித்த குற்றச்சாட்டின்பேரில் தமிழக மீனவர்கள் இலங்கை சிறையிலும், இலங்கை மீனவர்கள் இந்திய சிறைகளிலும் வாடுவதை தடுக்கவேண்டுமானால் மாதம் 15 நாள் இருநாட்டு மீனவர்களும் பரஸ்பரம் அடுத்தநாட்டு கடற்பரப்பில் மீன்பிடிக்க வகை செய்யும் ஒப்பந்தம் ஏற்படுத்துவது சரியான தீர்வான இருக்கும் என்று தாம் ஜனாதிபதியிடம் தெரிவித்ததாக கூறியுள்ளார்.

இலங்கை சிறையில் இருக்கும் தமிழக மீனவர்களைநேரில்சென்றுசந்தித்ததாகதெரிவித்த அழகிரி அவர்களின் விடுதலைக்கான சட்டரீதியான முன்னெடுப்புக்களையும் தாம்மேற் கொண்டதாகவும் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-8)

# ஈழத்தைப் பிரித்திருந்தால் பிரபாகரன்தான் ஜனாதிபதி

## இளங்கோவன் தகவல்

பாகிஸ்தானில் இருந்து பங்களாதேஷ் பிரிக்கப்பட்டது போல இலங்கையில் இருந்து தமிழீழத்தை பிரித்து தனி நாடாக மாற்ற ராஜீவ்காந்தி முயற்சி செய்தார். ஆனால் ஈழத்தைப் பிரித்தால் நான்தான் அங்கு ஜனாதிபதியாக இருப்பேன் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அடம்பிடித்ததால் தமிழீழத்தை தனியாக பிரிக்க முடியாமல் போய் விட்டது என்று இந்திய மத்திய முன் னாள் அமைச்சர் ஈ.வி.கே. எஸ்.இளங்கோவன் தகவல் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள அவர், இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான கட்சி காங்கிரஸ் என்று தவறான கருத்து பரப்பப்படுகிறது. நேரு பிரதமராக இருந்ததில் இருந்து இன்று வரை இலங்கைத் தமிழர்களை பாதுகாப்பதற்காக காங்கிரஸ் கட்சி பாடுபடுகிறது.

தற்போது கூட இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க 48 ஆயிரம் கோடி ரூபாவினை ஒதுக்கி 50 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

பாகிஸ்தானில் இருந்து பங்களாதேஷ் பிரிக்கப்பட்டதுபோல இலங்கையில் இருந்து தமிழ் ஈழத்தை பிரித்து தனி நாடாக மாற்ற ராஜீவ்காந்தி முயற்சி செய்தார். ஆனால் ஈழத்தை பிரித்தால் நான்தான் ஜனாதிபதியாக இருப்பேன் என்று பிரபாகரன் பிடிவாதம் பிடித்ததால் பிரிக்க முடியாமல் போய் விட்டது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (எ-8)

## தேர்தல் பிரசாரக் கூட்டம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டம் வடமராட்சி மாலுச் சந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபைத் தலைவர் பொ.வியாகேசு தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின்தலைவர் இரா.சம்பந்தன்,பாராளுமன்றஉறுப்பினர்களான சுரேஷ் பிரேமச் சந்திரன், மாவை சேனாதிராஜா, கிழக்குமாகாண சபை பாராளு மன்ற உறுப்பினர்கள், யாழ். மாவட்ட வேட்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் வடமராட்சி வேட்பாளர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், எஸ்.சுகிர்தன், ரீ.தர்மலிங்கம், வீ.சிவயோகன் ஆகியோருக்கான வேட்பாளர் அறிமுகமும் அறிமுக உரையும் இடம்பெறவுள்ளது.

பிற்பகல் 3 மணி தொடக்கம் இரவு 10 மணி வரை இடம்பெறவுள்ள இத்தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பொதுமக்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-8,24)

# குழிதோண்டிய சிறுவனின் உயிரைப் பறித்தது குழி!

(மட்டக்களப்பு)

குழி தோண்டிக் கொண்டிருந்த வேளையில் அந்த குழியில் விழுந்து 5 வயது சிறுவன் பலியான சம்பவமொன்று நேற்று மதியம் காத்தான்குடி விடுதி வீதி 03-ம் குறுக்கு தெருவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பிரதேசத்தில் வீட்டுத் தேவைக்காக ஒரு குழியொன்று தோண்டப்பட்டுள்ளது. இவ் வேளையில் குழிக்கு அருகாமையில் இருந்த அந்த வீட்டைச் சேர்ந்த இரு சிறுவர்கள் குழி சரிந்ததனால் குழியில் விழுந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட முஹம்மட் ஆதில் (வயது 05) எனும் சிறுவன் காத்தான்குடி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் போது உயிரிழந்துள்ளார்.

எனைய இருவரும் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதில் உயிரிழந்த சிறுவனின் சகோதரன் முஹம்மட் ஜெய்ன் தீவிர சிகிச்சைக்காக மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளதாகவும் குழி தோண்டியவர் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் காத்தான்குடி ஆதார வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை காத்தான்குடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மரணித்த சிறுவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (எ-8)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 1948 - 08 - 28

விண்ணில் 2012 - 09 - 13



பொலிகண்டி அணிஞ்சில்காட்டைப் பிறப்பிடமாகவும் கொற்றாவத்தை ஆண்டிவளவை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் திருமதி கனகம்மா கந்தையா

அவர்களின் ஓராண்டிலும் ஓயாத எண்ணங்கள்

அன்பு காட்டி
அரவணைத்து
அமுதூட்டிய - எம்
அன்புத்தாயே...
ஆலவிருட்சமாய்
அருகிருந்து
அறிவுரைகள் பலீ கூறி
எம் வாழ்வு ஏற்றம்பெற
தொல்லைகள் பல
நீர் கண்டீர்..
தொல்லை வந்த
வேளையிலும்
தோற்றுவிடா
மனதுடனே
எமை தோளில் சுமந்து
காத்தவரே

ஆண்டு ஒன்று
ஆனதம்மா
நீர் எம்மை விட்டு
சென்று விட்டீர்
என்ற எண்ணம்
எம் மனதில் இல்லையம்மா
எமை உள்ளிருந்து
இயக்கும் - இயக்கியாய்
நீர் உள்ளீர்
ஆதலால்
நாம் வாழும் காலம்வரை
எம்முடனே வாழ்ந்திடுவீர்கள்.

- பிள்ளைகள் -

ஆண்டிவளவு, கரணவாய் வடமேற்கு, வல்வெட்டித்துறை.

(C-4559)


# கோடரி வெட்டில் முடிந்த பிறந்த நாள் கொண்டாட்டம்

பிறந்த தின வைபவமொன்று இடம்பெற்ற வீட்டுக்கு கற்கள் வீசியதாக கூறப்படும் சம்பவமொன்றின் பின்னர் தரப்பினருக் கிடையில் ஏற்பட்ட மோதலில் 22 வயதுடைய இளைஞர் ஒருவன் கைக்கோடரியால் வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டதுடன் மேலும் மூன்று பெண்கள் காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் அலவத்துகொடை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. அலவத்துகொடை, விலானவத்த தோட்டத்தில் வசித்து வந்த ராமசந்திரன் யோகராஜா என்ற 22 வயதுடைய இளைஞரே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராவார்.

குழந்தையொன்றின் பிறந்த தினத்தை யிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வைபவத்தில் போது குறித்த வீட்டு பிறிதொரு தரப்பினரால் கற்கள் வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அயலவர்களே இந்த தாக்குதலை நடத்தியதாக அறிந்த தாக்குதலுக்குள்ளானவர்களுக்கும் அத்தரப்பினர்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்ட நிலையில் பின்னர் அது மோதலாக உருவெடுத்துள்ளது.

இம் மோதலின்போது கைக்கோடரியால் தலையில் வெட்டப்பட்டு கடும் காயங்களுடன் கண்டி போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளைஞன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். அத்துடன் சம்பவத்தில் உயிழந்த இளைஞனின் தாய் மற்றும் இரு சகோதரிகளும் காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இக்கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இரு பெண்கள் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அலவத்துகொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-8)





புதிய சுவை! புதிய அனுபவம்! புதிய தொழில்நுட்பம்!

அதிநவீன Pasteurized And Homogenized முறைப்படி தயாரிக்கப்பட்ட 100% சுகாதாரமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஐஸ்கிறீம் வகைகள் எமது அறிமுக விலையில் நல்லூர் விற்பனை நிலையத்தில் சுவைத்து மகிழலாம். பெறுமதி மிக்க பரிசில்கள் உங்களுக்காக காத்திருக்கின்றன.

ஷைலோ ஐஸ்கிறீம்

No.231 , Temple Road, Nallur, Jaffna.
T.P. 021 4926003

(3587)

# சட்டக்கல்லூரி மாணவர்களின் உண்ணாவிரதம் முடிவுக்கு வந்தது

(திருச்சி)

**திருச்சியில் ஆறு நாட்களாக நடைபெற்ற சட்டக்கல்லூரி மாணவர்களின் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது. இலங்கையில் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல், தமிழக மீனவர்கள் மீது இலங்கை படையினர் நடத்தும் தாக்குதல்கள் என்பவற்றை கண்டித்து இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டுமென்று வலியுறுத்தி இந்த உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது.**

திருச்சி அரசு சட்டக்கல்லூரி 3 ஆம் ஆண்டு மாணவர்கள் 5 பேர் கடந்த 26 ஆம் திகதி முதல் சாகும் வரை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்தனர்.

திராவிடர் விடுதலைக்கழக தலைவர் கொளத்தூர் மணி நேற்று முன்தினம் இம் மாணவர்களைச் சந்தித்து உண்ணாவிரதத்திற்கு தனது ஆதரவை தெரிவித்தார்.

தமிழக மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு மத்திய அரசு செயற்பட வேண்டும். இலங்கையில் பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டை நடத்த இந்தியா அனுமதிக்கக் கூடாது.

இந்தக் கருத்தை ஏனைய நாடுகளுக்கும் தெரிவித்து அழுத்தம் கொடுக்க வேண்டும். இதுபோல் மாநில அரசும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

இந்நிலையில் கல்லூரி துணை முதல்வர் ராஜேஸ்வரன், பேராசிரியர் பாலகிருஷ்ணன் ஆகியோர் உண்ணாவிரதம் இருந்த மாணவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதில் உடன்பாடு ஏற்பட்டதை அடுத்து உண்ணாவிரதத்தைக்கைவிடுவதாக மாணவர்கள் தெரிவித்தனர்.

இதனால் 6 நாட்கள் உண்ணா விரதம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. (அ-2)

## 1500 பேருக்கு டெங்கு

இம்மாதத்தில் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 500 ஐ தாண்டியுள்ளது.

இவ்வருடத்தில் மாத்திரம் சுமார் 22 ஆயிரம் பேர் வரை டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் சுமார் 47 வீத நோயாளிகள் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என சுட்டிக்காட்டப்படுகின்றது. (அ-2)

# நவி அம்மையார் நாடு திரும்பினார்

(கொழும்பு)

இலங்கைக்கு 7 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்த ஐ.நா. மனித உரிமைகள் விவகாரங்களுக்கான உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளை, தமது விஜயத்தை நிறைவு செய்து கொண்டு நேற்று அதிகாலை 12.25 மணியளவில் பிரேங்போட் நோக்கி இலங்கைக்கு சொந்தமான யுஎல்-553 என்ற விசேட விமானம் மூலம் பயணித்துள்ளார்.

கடந்த 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இலங்கை வந்த ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையர் நவநீதம்பிள்ளை ஏழுநாட்கள் இலங்கையில் தங்கியிருந்தார். இக்காலப் பகுதியில் போர் வலயப் பகுதிகளுக்கு சென்று மக்களை சந்தித்ததுடன் போர்க்காலத்தில் காணாமற் போனவர்களின் உறவினர்களையும் ஊடக அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சந்தித்தார். அத்துடன் ஜனாதிபதி, அமைச்சர்கள் சிலர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை சந்தித்திருந்தார்.

மேலும் நேற்றுமுன்தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தனது விஜயத்தின் நோக்கம் தொடர்பிலும் தான் இலங்கையில் காண்டுணர்ந்த உண்மைகளையும் மிக ஆணித்தரமாக எடுத்துரைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# டச்சு வீதியை புனரமைக்குக

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டச்சுவீதி பல வருடங்களாக பழுதடைந்து போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் காணப்படுகிறது. சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் எல்லைக்குட்பட்ட இவ்வீதி சுமார் 1 1/2 கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்டது.

இப் பிரதேசத்தின் பிரபல பாடசாலைக்குச் செல்வதற்கும் மந்துவில்-சரசாலை ஊடாக பருத்தித்துறை வரை பயணிப்பதற்குமான பிரதான வீதியாக இவ் வீதி பயன்படுத்தப்படுகிறது.

மழைகாலம் ஆரம்பிக்கவுள்ள நிலையில் அதற்கு முன்னர் இவ் வீதியை செப்பனிட்டு போக்குவரத்தை இலகுபடுத்தி தருமாறு மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். (அ-9-29)


வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ்ப்பாண மாவட்டம்

எமது போராட்டத்தில்
இதுவரை இழந்த இழப்புகளை
அர்த்தமுள்ள உரிமை
அரசியலாக்க வாக்களியுங்கள்
5
ஈழமக்கள்
ஜனநாயகக் கட்சி
(ஈ.பி.டி.பி.)

ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்
(பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர்)
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
X 5
(E-019)



வடமாகாண சபைத் தேர்தல் 2013

கிளிநொச்சி மாவட்டம்
ஆசானாய் இருந்து
மாணவர்களுக்கு சிறந்த
கல்வியை புகட்டிய கிளிநொச்சி
மாவட்டத்தின் சிற்பி
வீ.ஆனந்தசங்கரி
தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழரசுக் கட்சி)
X 2
(ec-4936)



வடமாகாண சபைத் தேர்தல்-2013
யாழ். மாவட்டம்
இரத்தினலிங்கம் ஜெயசேகரன்
(வர்த்தக சங்கத் தலைவரும் சமூக சேவையாளரும்)


தமிழ் மக்களின் உரிமைகளை
ஜனநாயக முறையில் பெற்றிட
தமிழ் மக்களின் பொருளாதாரத்தினை
மேம்படுத்திட, தமிழ் மக்களின்
கலை, கலாசார விழுமியங்களை
பாதுகாத்திட, தமிழ் மக்களின்
தனித்துவத்தினை பேணிட
ஓர் அணியில் திரள்வோம்!
இலங்கை தமிழரசுக் கட்சி
X 6
(ec-4941)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு
வடமாகாண சபைத் தேர்தல் 2013

X 4
எங்கள் அண்ணன்
சிராஸ்
செயலில் செம்மை
வார்த்தையில் உண்மை
உறுதியோடு வாக்களிப்போம்
www.voiceofseeras.com
(ec-4939)

# ஜனசக்தி–நொதர்ன் சென்ரல் வைத்தியசாலை இணைந்து வழங்கும் குடும்பக் காப்புறுதி!



மருத்துவ சேவையில் 32 வருடகால அனுபவத்தைக்கொண்ட நொதர்ன் சென்ரல் வைத்திய சாலை வட மாகாண மக்களின் நலன் கருதி முதல் முறையாக ஜனசக்தி காப்புறுதியுடன் இணைந்து குடும்பக் காப்புறுதி திட்டம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது.

இந்த திட்டத்தின் பிரகாரம் குடும்ப காப்புறுதி திட்டமானது Scheme A, Scheme B என இரு தெரிவுகளைக் கொண்டுள்ளது. Scheme A க்கான வருடாந்த கட்டுப்பணம் ரூ10,763.54 (தனி நபருக்குரியது, வரிப்பணம் உள்ளடக்கியது) ஆகும். குடும்பத்துக்கான கட்டணம் ரூ.11,806.65 ஆகும்(வரிப்பணம்உள்ளடங்கலாக) இதற்கான காப்புறுதி தொகை ரூ.80,000+5,000(OPD) ஆகும். Scheme B திட்டத்துக்கான தனிநபர் வருடாந்த கட்டுப்பணம் வரிப்பணம் உள்ளடங்கலாக ரூ12,952.92 ஆகும்.

குடும்பத்தாருக்கு ரூ. 14,645. 68 ஆகும். இதற்கான காப்புறுதி தொகை ரூ.100,000 + 5,000 (OPD) ஆகும். இவை நிபந்தனைகளுக்கு உட்பட்டவையாகும்.

60 வயதுக்குட்பட்ட தாய், தந்தை மற்றும் 18 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் இக்காப்புறுதியைப் பெற தகுதியுடையோராவர்.

இக்காப்புறுதிக்கான கட்டுப் பணத்தை தனியார் வங்கிக் கடன் அட்டையைப் பயன்படுத்தி இலகுவாகச் செலுத்துவோருக்கு நொதேர்ன் சென்ரல் வைத்திய சாலையால் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

இந்த காப்புறுதிக்கிணங்க வெளிநோயாளர் பிரிவு (OPD) ரூபா. 5000 வரை வழங்கப்படும். வைத்திய ஆலோசனை, மருந்துக் கட்டணம், எக்ஸ்ரே ஆய்வுகூடப் பரிசோதனைகள், என்பன இதில் உள்ளடங்குகின்றன. சாதாரண மகப்பேற்றுக்கு ரூ. 50,000 வழங்கப்படும். சத்திர சிகிச்சை மகப்பேற்றுக்கு வைத்தியசாலை கட்டணத்தில் 75 வீதம் வழங்கப்படும். (நிபந்தனைகளுக்கு உட்படும்)

அத்துடன் சகல விதமான சத்திர சிகிச்சைகளுக்கும் அதாவது பொது சத்திரசிகிச்சை, கண் சத்திர சிகிச்சை, காது, மூக்கு, தொண்டை (லாப்ரோஸ்கொபி), சிறுநீரக தொகுதி (யூரோலொஜி) போன்றவற்றுக்கும் காப்புறுதி வழங்கப்படும்.

மேலும் நொதர்ன் சென்ரல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் குழந்தைகளுக்கு இந்த காப்புறுதி மூலம் கட்டணங்களில் 15 வீத கழிவு வழங்கப்படும்.

காப்புறுதியில் இணைந்து இரண்டு மாதங்களின் பின்னரே இந்தசலுகைகளை பெற முடியும். மகப்பேற்றுக்கான சலுகைகளை காப்புறுதியில் இணைந்து 10 மாதங்களின் பின்னர் பெறலாம்.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு நொதர்ன் சென்ரல் வைத்தியசாலையுடன் 021 - 221 9988, 021-2219977, 021-222 2263 ஆகிய தொலைபேசி இலக்கங் களுடன் தொடர்பு கொள்வதன் மூலமாகவும்,

ஜனசக்தி நிறுவனத்தின் தர்ஷன் 0777 789266 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டும் பெற்றுக் கொள்ளலாம்.




# SLIIT பட்டக் கற்கை அனுமதி


தகவல் தொழில்நுட்பம், வர்த்தகம் மற்றும் பொறியியல் ஆகிய கற்கைநெறிகளில் பட்டங்களை வழங்குவதில் முன்னிலையில் திகழும் SLIITகல்வி நிறுவனம் தற்போது 2013/2014 ஆண்டு இளநிலை பட்டப் படிப்பு திட்டத்திற்கான புதிய மாணவர்களை இணைத்து கொள்ள தொடங்கியுள்ளது.

SLIIT கல்வி நிலையத்தில் தமது பட்டதாரி கற்கைகளை தொடர விரும்பும் மாணவர்கள் தமது பெற்றோருடன் எதிர்வரும் 14 -ம் திகதி காலை 9 மணிக்கு மாலபே மற்றும் கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள SLIITஇன் பிரதான பல்கலைக்கழகங்கள் அல்லது மாத்தறை, கண்டி, யாழ்ப்பாணம் மற்றும் குருநாகல் ஆகிய பிரதேசங்களில் உள்ள கல்வி நிலையங்களுக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

SLIIT கல்விநிலையத்தின்பட்டப் படிப்பு கற்கைகள் அனைத்தும் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை பெற்றுள்ளது.

விண்ணப்பங்களுக்கான முடிவுத்திகதி செப்ரெம்பர் 27 ஆம் திகதியாகும். மேலதிக தகவல்களை அறிந்து கொள்ள 2301904/ 2413900 அழைக்கவும் அல்லது www.sliit.lk என்ற இணையத்தள முகவரி ஊடாகவோ பெற்றுக் கொள்ள முடியும்.

# இந்திய பொருளாதாரம் வீழ்ச்சி



இந்தியாவின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி 4.4 சதமாகக் குறைந்து மீண்டும் பொருளாதாரம் கீழ்நோக்கி செல்வதைக் காட்டுவதாக அமைந்துள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு இது பெரும் வீழ்ச்சியாக உள்ளது.

ஏப்ரல் முதல் யூன் வரையிலான நடப்பு காலாண்டு இந்தியாவின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி 4.4 சதமாக குறைந்துள்ளது. இது கடந்த ஆண்டு இதே கால கட்டத்தில் 5. 4 சதமாக இருந்தது. இது குறித்து பொருளாதார நிபுணர்கள் பெரும் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நடப்பு 2013-14ம் நிதியாண்டில், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 3.7 சதவீதமாக குறையும் என பீ.என்.பி. பரிபாஸ் வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யுனிலீவர் நிறுவனத்தின் தலைவர் பதவியில் இருந்து கப்ரால் ஓய்வு



யுனிலீவர் சிறிலங்கா நிறுவனத்தின் தலைவர் பதவியிலிருந்து அமல் கப்ரால் எதிர்வரும் ஒக்ரோபர மாதம் முதல் ஓய்வு பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2005-ம் ஆண்டு முதல் யுனிலீவர் சிறிலங்கா நிறுவனத்தின் தலைவர் பதவியை பொறுப்பேற்று நிறுவனத்தை மேலும் வளர்ச்சிப் பாதையில் முன்னெடுத்த பெருமையைக் கொண்ட அமல் கப்ரால், 31 ஆண்டுகளுக்கு முன்னர் யுனிலீவர் நிறுவனத்துடன் இணைந்து கொண்டார்.

இலங்கையில் 75 வருடகாலமாக வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் யுனிலீவர் நிறுவனம், இதுவரையில் தனது தலைமைப் பொறுப்பில் இலங்கையர்களை மாத்திரமே நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதில் அமல்கப்ரால் 2-வது இலங்கையர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது இராஜினாமாவைத் தொடர்ந்து, நிறுவனத்தின் புதிய தலைவராக ஷசியா சயிட் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் யுனிலீவர் பாகிஸ்தான் நிறுவனத்தின் உப தலைவர்,வாடிக்கையாளர் உறவுகள் மேம்படுத்தல் பிரிவில் பணியாற்றியவராவார்.

# இலங்கை ரூபாயின் பெறுமதி வரலாறு காணாத வீழ்ச்சி

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி கடந்த வெள்ளிக்கிழமை நாணய கொடுக்கல் வாங்கல்களின போது 135.01 ஆக வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

இது கடந்த செவ்வாய்க்கிழமை கொடுக்கல் வாங்கல் பெறுமதியான 132.80 உடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு சரிவாகும்.

உள்நாட்டு கொள்வனவாளர்களின் அதீத டொலர் கொள்வனவின் காரணமாக இந்த பெறுமதி வீழ்ச்சி ஏற்பட்டதாகவும், விரைவில மீட்சியடையும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாய் மதிப்பு வீழ்ச்சி, தொடர்ந்து அதிகரிப்பதால், அனைத்து பொருட்களின் விலையும் உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

# பணவீக்கம் அதிகரிப்பு

இலங்கையின் பணவீக்க நிலமை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

த லங்கா பிஸ்னஸ் ஒன்லைன் இணையத்தளம் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

யூலை மாதம் 6.1 ஆக காணப்பட்ட இலங்கையின் பணவீக்கம், கடந்த மாதம் 6.3ஆக அதிகரித்துள்ளது.

இது கடந்த 12 மாதங்களில் ஏற்பட்டுள்ள அதிகூடிய பணவீக்க நிலைமை என்று தெரிவிக்கப்படுகிறது.

# என்.டி.பி குழுமத்தின் சிஈஓவாக தியாகராஜா



ஹற்றன் நஷனல் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக கடமையாற்றிய ராஜேந்திரா தியாகராஜா, என்.டி.பி குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக கடந்த ஓகஸ்ட் 24ஆம் திகதி முதல் தமது கடமைகளை பொறுப்பேற்றுள்ளார்.

இதுவரை காலமும் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக கடமையாற்றிய ரசல் டி மெல் தமது பதவியிலிருந்து ஓய்வு பெறுவது குறித்து அறிவிப்பு வெளியானதை தொடர்ந்து, இந்த புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக குழுமம் அறிவித்துள்ளது.

30 வருட காலம் என்டிபி குழுமத்தில் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டுள்ள ரசல் டி மெல் என்டிபி குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக 2010ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டிருந்தார்.

ராஜேந்திர தியாகராஜா சுமார் 29 ஆண்டு காலம் வங்கியியல் துறையில் முன் அனுபவத்தை கொண்டுள்ளதுடன், ஹற்றன் நஷனல் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும், முகாமைத்துவப் பணிப்பாளராகவும் 9 ஆண்டுகள் கடமை புரிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் வேகமாக வளர்ந்து வரும் வங்கிகளில் ஒன்றாக என்டிபி அமைந்துள்ளதுடன், மாலைதீவுகள் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்கும் தனது சேவைகளை விஸ்தரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிங்கர் கிளை யாழில் திறப்பு

சிங்கர் கூட்டு குழும நிறுவனங்களின் அங்கமான சிங்கர் நிதி நிறுவனத்தின் 20ஆவது கிளை யாழில் கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது. யாழப்பாணம் கே.கே.எஸ் வீதியிலுள்ள இந்தக் கிளையினை சிங்கர் குழுமத்தின் நிறைவேற்று அதிகாரி அசோகா பீரிஸ் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் சிங்கர் நிதி நிறுவனங்களின் நிறைவேற்று அதிகாரி சாந்த விஜயவீர, கிளையின் முகாமையாளர் சி.தனுஷன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 131.69 | 135.01 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 203.78 | 209.88 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 173.57 | 179.48 |
| சுவிஸ் பிராங் | 140.53 | 146.07 |
| கனேடிய டொலர் | 124.26 | 128.85 |
| அவுஸ்திரேலிய டொலர் | 116.90 | 121.53 |
| சிங்கப்பூர் டொலர் | 102.67 | 106.32 |
| ஜப்பான் யென் | 1.33 | 1.38 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 1.99 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 36.22 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# நீடித்து நிலைக்கக்கூடிய தீர்வை பெற்றுத்தர ஆணை தாருங்கள்

## ஐ.தே.க. துவாரகேஸ்வரன் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

"இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு ஒன்றைத் துணிச்சலுடன் முன்வைக்கக் கூடிய முதுகெலும்புள்ள ஒரே அரசியல் தலைமை ஐ.தே.கட்சிதான். அக்கட்சிக்கு வாக்களிப்பதன் மூலம் நீதியான, நிலையான நீடித்து நிற்கக் கூடிய ஒரு தீர்வுக்கான தமது உறுதிப்பாட்டை வடபகுதி மக்கள் வெளிப்படுத்த வேண்டும். அதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம் தமிழ் மக்களுக்கு கிடைத்திருக்கின்றது. அதனை அவர்கள் தவற விடக்கூடாது'' என வட மாகாண சபைத் தேர்தலில் ஐ.தே.கட்சியின் சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் முதன்மை வேட்பாளர் தியாகராஜா துவாரகேஸ்வரன் அறிக்கை வெளியிட்டுள்ளார். அவ் வறிக்கையில்,

ஆயுதப் போராட்ட ரீதியில் புலிகள் துணிச்சலான செயற்பாட்டை வெளிபடுத்தினார்கள் என்பது உண்மையே. ஆனால், ஜனநாயக போராட்டத்திலே துணிச்சலான செயற்பாட்டை வெளிப்படுத்தி நிரூபித்தவர் அமரர் தியாகராஜா மகேஸ்வரன் மற்றும் அவர் பலப்படுத்தி நின்ற ஐ.தே.கட்சி தலைமையும் தான் என்பதை தமிழர்கள் மறந்து விடக்கூடாது.

இன வன்முறை மூலமும் ஆயுதப்படைகளின் கொடூர நடவடிக்கைகள் மூலமும் சிறுபான்மை மக்களை, குறிப்பாகத் தமிழர்களை அழித்து, ஒழித்து, அடக்கி, அடிமைப்படுத்தி ஆளலாம் என்று கருதி அந்தத் திட்டத்தையே தென்னிலங்கை ஆட்சியாளர்கள் முழுமூச்சாக முன்னெடுத்து வந்த போது அப்பாதையிலிருந்து தாம் அணி வகுத்து நின்ற அரசியல் கட்சியின்தலைமையைத் திசைதிருப்பியவர் அமரர் தியாகராஜா மகேஸ்வரன்.

தமிழர்களை நோக்கி சமாதான சமிக்ஞையை வெளிப்படுத்த தமது ஐ.தே.க. தலைமையைத் தூண்டி வழிப்படுத்தியவரும் அமரர் மகேஸ்வரன் தான்.

அதன் விளைவாக சர்வதேச அனுசரணையுடன் தமிழர் தலைமையோடு பல சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டன. தமிழர்களுக்கு சமஷ்டி அடிப்படையில் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வுத்திட்டம் ஒன்றை வழங் கத்தயார் என்று ஒஸ் லோ அறிக்கை மூலம் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.க. அரசு முடிவை வெளியிட்டது. இந்தத் துணிச்சலான முடிவை ரணிலின் அரசு முன்னெடுக்க முழுப்பலமாகவும் பின்புல சக்தியாகவும் செயற்பட்டவர் எமது மறைந்த தலைவர் தி. மகேஸ்வரன்தான்.

ஆனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பேரினவாத நிறைவேற்று அதிகாரத்தலைமை அதற்காக ஐ.தே. க. அரசை கலைத்து ஆட்சியை ஆக்கிரமித்துக் கொண்டது. இதனால் மீண்டும் எமக்கு கிடைத்த வாய்ப்பை 2005 நவம்பரில் நாம் கோட்டை விட்டோம்.

மீண்டும் வடக்கு மாகாணத்தில் அமைதியும் சமாதானமும் நீதியும் நியாயமும் ஏற்பட வேண்டுமானால் தென்னிலங்கை ஆட்சிப்பீடத்திலிருந்து கொண்டு அதற்காக நேர்மைத் திறனுடன் பணியாற்றக் கூடிய ஆட்சித்தரப்பை உருவாக்குவது தான் ஒரே வழி. அதற்கான அத்திவாரத்தை அமைப்பதற்கான வாய்ப்பு எமக்குக் கிட்டியிருக்

# சர்வதேசத்தின் நெருக்குதல்களை முறியடிக்க தயாராகவேயுள்ளோம்

## ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய சூளுரை

நவிபிள்ளை இலங்கை எதேச்சதிகார பாதையில் செல்வதாக கருத்துக் கூறியிருக்கிறார்.

இதனைவிட வேறுவகையான நிலைப்பாட்டை இங்கு நாம் எதிர்பார்க்கவில்லை. காற்று எந்தப்பக்கம் வீசுகிறது என்பது எங்களுக்குத் தெளிவாகத் தெரிகிறது என அமைச்சர் கெஹகலிய ரம்புக்வெல பி.பி.சிக்கு தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

30 ஆண்டுகளாக பயங்கரவாதத்தின் பிடியில் இருந்த வடக்கில் இன்று மக்களுக்கு தேர்தல் என்ற வார்த்தையை யாவது கேட்பதற்கு உரிமை கிடைத்திருக்கிறது.

இங்கு தேர்தல்கள் நடக்கின்றன. அரசியலமைப்பின் கட்டமைப்புக்கு வெளியில் எதுவும் நடக்கவில்லை. பலமான நாடாளுமன்றம் ஒன்றும் இருக்கிறது.

பெரும்பான்மையான மக்களின் பங்களிப்புடன் அரசியல் நடக்கிறது. இங்கு எல்லாம் இருக்கிறது. ஆனால், ஐ.நா.மனிதஉரிமைகள்ஆணையாளரின் கருத்துக்கள் ஏற்கனவே திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி நிரலொன்றின் வெளிப்பாடு தான் என்றும் அவர் கூறினார்.

பயங்கரவாதத்தின் மூலம் இந்த நாட்டின் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்து விட்டன. அவை தோல்வியடைந்தாலும் சர்வ தேச மட்டத்தில்தொடர்ந்தும்அதனை முன்னெடுக்கப் பார்க் கிறது.

விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் ஏற்கனவே தோற்கடிக்கப்பட்டு விட்டா லும் கூட அவர்களின் கருத்துக்களை இன்னமும் முன்னெடுத்துச் செல்லும் திட்ட மிட்ட நிகழ்ச்சி நிரல்கள் முன்னெடுக்கப்பட்ட வண் ணமே இருக்கின்றன என்பது தெளிவாகத் தெரிகிறது.

யுத்த காலத்தில் சர்வதேச அழுத்தங்களை நாம் எவ்வாறு எதிர்கொண்டோமோ அதேபோலவே இப்போதும் பதில் நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

விடுதலைப்புலிகளுடனான போரின் போது சர்வதேச அமைப்புக்கள் அரசாங்கத்துக்கு எவ்வளவு நெருக்குவாரங்களை கொடுத்தன.

முப்படைகளின் தளபதி என்ற வகையில் ஜனாதிபதி, மக்களின் ஆணை பெற்ற கட்சியின் அரசாங்கம் என்ற வகையில் திடமான முடிவுகளை எடுக்காது சர்வதேச மட்டத்திலுள்ள சிலரை மகிழ்ச்சிப்படுத்தும்வகையில்செயற்பட்டிருந் தால் நாட்டில் இன்னமும் யுத்தம் முடிந் திருக்காது.

ஆதலால் இனிவரும் சவால்களையும் அதே போலவே எதிர்கொள்வோம் என்றார் கெஹலிய ரம்புக்வெல. (அ-2)

# ஆன்மீக கண்காட்சி

நல்லைக் கந்தன் மகோற்சவத்தை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையின் ஆதரவுடன் யாழ்.சின்மயா மிஷன் ஆன்மீக கண்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

இதற்கமைய இக்கண்காட்சி நாளை செவ்வாய்க்கிழமை, நாளை மறுநாள் புதன்கிழமை மற்றும் வியாழக்கிழமை ஆகிய தினங்களில் காலை 9 மணி முதல் இரவு 9 மணிவரை நடைபெறவுள்ளது. (அ-7)



## இன்று ஒரு தகவல்

### பீமன் கேட்ட கேள்வி

பஞ்சபாண்டவர்களில் மூத்தவர் தர்மபுத்திரர்.

ஒருநாள் பிச்சைக்காரன் ஒருவன் அவரிடம் வந்து பிச்சை கேட்டான்.

அந்தச் சமயத்தில் தர்மர் ஏதோ ஒரு வேலையாக இருந்தார்.

அதனால் அவர் 'நாளைக்கு வா!' என்று கூறி அவனை அனுப்பி வைத்தார்.

அவனும் 'சரி' என்று சொல்லிவிட்டுச் சென்றான். அந்தக் காட்சியை சற்றுத் தூரத்திலிருந்த பீமன் பார்த்துக் கொண்டிருந்தான்.

உடனே அவன் என்ன செய்தான் தெரியுமா?

ஒரு முரசை எடுத்துக் கொண்டே ஏதோ சொல்ல ஆரம்பித்தான். இந்த விபரம் தர்மருக்கும் தெரிய வந்தது.

அவர்பீமனை அழைத்து "உனக்குஎன்ன ஆயிற்று?" என்று கேட்டார்.

அதற்கு பீமன், "நான் எல்லோரிடமும் சென்று என் அண்ணன் காலத்தை வென்று விட்டார்! என்று சொல்லப் போகிறேன்" என்றான்.

''ஏன் அப்படி சொல்லப் போகிறாய்?'' என்று கேட்டார் தர்மர்.

அதற்கு பீமன், "நீங்கள் பிச்சைக்காரனை நாளைக்கு வரச் சொன்னீர்களே... நீங்கள் நிச்சயமாக நாளைக்கு உயிரோடு இருப்பீர்களா? அந்தப் பிச்சைக்காரனும் நாளைக்கு நிச்சயமாக உயிரோடு இருப்பானா?

ஒரு வேளை நாளைக்கு நீங்கள் உயிரோடு இருந்தாலும் பிச்சையிடும் மனநிலை உங்களுக்கு இருக்குமா? நிச்சயமாக பிச்சை போடுவீர்களா? நாளை வரையில் அவன் பிச்சைக்காரனாகவே இருப்பான் என்பது நிச்சயமா? நாளைக்கு உங்கள் இருவரின் சந்திப்பு நிச்சயம் நடக்குமா?

நீங்கள் காலத்தை வென்று விட்டீர்கள்...

அதனால் தான் அவ்வளவு நிச்சயமாகப் பிச்சைக்காரனை நாளைக்கு வரச் சொல்லியிருக்கிறீர்கள்! இது எவ்வளவு பெரிய விடயம்?

எனக்கு நேரமாகி விட்டது. நான் ஊரிலிருப்பவர்களிடமெல்லாம் சென்று இதைச் சொல்ல வேண்டும். தாமதிக்க முடியாது.

ஏனென்றால்... இந்த நேரம் போய்விட்டால் அடுத்த நாழிகை எனக்குக் கிடைக்கும் என்பது நிச்சயமில்லை!" என்றான் பீமன்.

உடனே தர்மர், "தம்பி பீமா! கொஞ்சம் பொறு... நான் தவறு செய்துவிட்டேன். நான் பிச்சைக்காரனிடம் கூறியது போல் பரிபூரண சுதந்திரம் பெற்ற மனிதன் தான் பேச முடியும். அப்படி வாக்குறுதி தர முடியும்.

அந்தப் பிச்சைக்காரனை உடனே இப்போதே கூப்பிடு. ஏதாவது உடனே கொடுத்து அனுப்பி வைக்கிறேன். நாளைக்கு என்ன நடக்கும் என்று யாருக்குத் தெரியும்?" என்றார்.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், நிகழ்காலம் ஒன்றுதான் நம் கையிலிருக்கிறது. அதைச் சரியாகப் பயன்படுத்த வேண்டியது நம் பொறுப்பு.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# இராணுவ சோதனைகள் இனி ஓமந்தையில் இல்லை!

(ஓமந்தை)

ஓமந்தை இராணுவ சோதனைச் சாவடியில் சோதனைகளும் நிறுத்தப்பட்டுள்ளதாக வன்னி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த சோதனை சாவடியில் நேற்று முன்தினத்திலிருந்தே சகல சோதனை நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளதென அவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையில் இடம்பெற்ற யுத்தத்தின் போதும் அதற்கு பின்னரும் இந்த சோதனை சாவடி பிரதான சோதனைச் சாவடியாக செயற்பட்டது.

வடக்கில் இருந்து தெற்கிற்கும் தெற்கிலிருந்து வடக்கிற்கும் செல்வோர் இந்த சோதனை சாவடியில் குறிப்பிட்டளவு நேரம் நிறுத்தி வைக்கப்பட்டு அடையாள அட்டைகள் பதிவு செய்யப்பட்டதன் பின்னரே அந்தந்த பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வவுனியா, ஓமந்தை இராணுவ முகாமில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

பாதுகாப்பு காரணங்களுக்காக வாகனங்களின் பதிவு மட்டும் இங்கு இனிமேல் இடம்பெறும் எனவும் போக்கு வரத்துபயணிகளைவாகனங்களில் இருந்து இறக்கி சோதனை செய்யும் நடவடிக்கைகள் இடம்பெறாது என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன்வாகனங்களில்கொண்டு செல்லப்படும்பொருட்களும்சோதனை நடவடிக்கைகளுக்காக இறக்கி ஏற்றப்படா எனவும் தெரிவித்தார்.

இதேவேளை சோதனைச்சாவடி இதுவரை நாட்டின் பாதுகாப்புக்கு பெரும் உறுதுணையாக காணப்பட்டதாக அவர் தெரிவித்ததுடன், இதனூடாக தினமும் சராசரியாக 320 பேருந்துகளும் 575 பாரஊர்திக ளும் 630 சிறியரக வாக னங்களும் தெற்கில் இருந்து வடக்கிற்கு சென்று வந்தன என்றும் கூறினார்.

மேலும் தினமும் சராசரியாக 15 ஆயிரத்து 377 உள்ளூர் பயணிகளும் 198 வெளிநாட்டு பயணிகளும் தெற்கில் இருந்து வடக்கிற்கு சென்று வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை வடக்கில் இருந்து தெற்கிற்கு 254 பேருந்துகளும் 710 பார ஊர்திகளும் 773 சிறிய ரக வாகனங்களும் தினமும் சென்று வந்தன.

அத்துடன், தினமும் சராசரியாக 17 ஆயிரத்து 164 உள்ளூர் பயணிக ளும் 111 வெளிநாட்டு பயணிகளும் தெற்கிற்கு செல்வதாகவும் தெரிவித்திருந்தார். யுத்தகாலத்தின் போது, ரிமோட் கொன்ரோல்கள், வயர்கள், தொலை நோக்கிகள், திசை காட்டிகள், சிறியரக பற்றரிகள், இராணுவ பயன்பாட்டுக்கானபொருட்களைகொண்டு செல்வதை கட்டுப் படுத்துவதற்காக இந்த சோதனைச் சாவடி அமைக்கப்பட்டி ருந்ததாகவும்அவர் மேலும் தெரிவித்தார்.சுமார் 15 வருடங்களாக செயற்பட்டு வந்த இச் சோதனைச் சாவடியில் தற்போது சகல சோதனை நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுள்ளன என்றார். (செ-11)

# வடக்கு மாகாண சபை தேர்தலை மக்கள் புறக்கணிக்கக்கூடாது

## அரியம் எம்.பி அறிவுரை

(கொழும்பு)

வடக்கு மாகாண சபைத் தேர்தலை மக்கள் புறக்கணிப்பதால் நாம் தமிழ்த் தேசியப் பணியைச் செய்ய முடியாமலிருக்கும் என கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.கிளிநொச்சி கோணாவில் பிரதேசத்தில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் வட மாகாண சபைக்கான தேர்தல் பரப்புரைக் கூட்டம் கரைச்சிப் பிரதேச உறுப்பினர் சி. சுப்பையா தலைமையில் நடைபெற்றது.

இத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் சிறப்புரையாற்றிய கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் மேலும் தெரிவிக்கையில்,வடமாகாண சபைத் தேர்தலை நாம் புறக்கணிப்போமாயின் அல்லது வாக்களிக்காமல் விடுவோமாகில் அந்த இடத்தை நிரப்பப் போவது வேற்றுக் கட்சிகளின் மாற்றுக் கொள்கைகளைக் கொண்ட வர்கள்தான்.

அவர்கள் அந்த இடங்களைப் பிடிக்கும் போது நாம் தமிழ்த் தேசியப் பணியைச் செய்யமுடியாதிருக்கும். வட மாகாண சபைக்கான தேர்தலை உற்று நோக்கும் போது அச்சபையைச் கைப்பற்றக் கூடிய வாய்ப்பு எமக்கு உள்ளது.

இந்த ஆட்சியை நாம் கைப்பற்றிக் கொண்டு தமிழ்த் தேசியத்தின் அடுத்த கட்டப் பணியினை மேற்கொள்ளும் போது தான் பல பரிணாமங்களை நாம் அடைய முடியும் எனத் தெரிவித்தார். (அ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 100-140 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 80 | 80 |
| தக்காளி | 40 | 40 | 40 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 | 60 |
| கோவா | 60 | 70 | 80 | 80 |
| கரட் | 80 | 80 | 100 | 120 |
| பூசணி | 25 | 30 | 40 | 40 |
| புடோல் | 20 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 120-140 | 140-180 | 160 |
| பெரிய வெங்காயம் | 130 | 130 | 140 | 140 |
| பாகற்காய் | 60 | 60 | 60 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 80 | 80 |
| பயற்றங்காய் | 20 | 30 | 60 | 40 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 | 120 |
| பீற்றூட் | 10 | 20 | 40 | 40 |
| கறிமிளகாய் | 40 | 40 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 40 | 80 | 160 | 100 |
| போஞ்சி | 120 | 100 | 100 | 160 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 30 | 25 |
| தேசிக்காய் | 300 | 250 | 400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40-50 | 40 | 35-40 |
| இராசவள்ளி | 60 | 80 | 120 | 120 |

## இராசி பலன்

*02.09.2013*
*(ஆவணி 17, திங்கட்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு*
*துவாதசி பிற்பகல் 2.17 மணிவரை*
*பூசம் பின்னிரவு 4.19 மணிவரை*
*இராகுகாலம் 7.35-9.05 மணிவரை*
*சுபநேரம் 12.05-1.35 மணிவரை*
*திருநீலகண்டர் குருபூசை*
*பிரதோச விரதம்*

**மேடம்** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க நினைப்பீர்கள்.

**இடபம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, நாடி வந்தவர்களுக்கு நன்மை செய்து மகிழும் நாள்.

**மிதுனம்** இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், சுபகாரியப் பேச்சுகள் முடிவாகி மனநிம்மதியைக் கொடுக்கும், பேச்சில் கனிவு பிறக்கும், மாமன், மைத்துனர் வழியில் நல்ல செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்** தொழில் நன்மை கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், பயணங்களால் பலனுண்டு, நீங்கள் தேடிச் செல்ல நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம்.

**சிங்கம்** தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முன்வருவீர்கள், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கும் வாய்ப்புண்டு, திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம்.

**கன்னி** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும், திடீர் பணவரவு மனதிற்கு சந்தோசத்தைக் கொடுக்கும், எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்பாராத வகையில் சில தனவரவுகள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.

**விருச்சிகம்** பயணங்களால் பலனுண்டு, செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், புதிய திட்டங்கள் கைகூடும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**தனுசு** வழிபாட்டால் சுகம் காண வேண் டிய நாள், திட்டமிட்ட பயணங்களில் சிறு தடை, தாமதங்கள் ஏற்பட வாய்ப்புண்டு, நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்வார்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், சொந்தபந்தங்களின் வருகையுண்டு, பேச்சில் கனிவு பிறக்கும், நண்பர்கள் உதவி செய்ய முன்வருவர், கௌரவமான நாள்.

**கும்பம்** உடல்நலம் சீராகும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, சுவாரஸ்மான நாள், செய்தொழில் மேன்மையுண்டு, உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**மீனம்** வியாபார விருத்தியுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு, எதிர்பாராத வகையில் சில காரிய இடையூறுகள் ஏற்படலாம், புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள்.

வளவன்

# இலங்கைக்கு எதிரான விடயங்களை நவி அம்மையிடம் பேசவில்லை

**கரு.எம்.பி. தெரிவிப்பு**

(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான எந்தவொரு விடயத்தையும் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளையுடன் பேசவில்லை. ஜனநாயகம், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முன்னெடுத்தல் மற்றும் மனித உரிமைகளை பாதுகாக்கும் பொறிமுறை என்பவை தொடர்பிலேயே நவநீதம்பிள்ளையுடன் கருத்துக்களை பரிமாறிக் கொண்டோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அவர் 17 ஆவது திருத்தச் சட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தியதுடன் நல்லாட்சிக்கான வரைபினையும் கையளித்துள்ளோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நாமனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட குழுவினர் எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து சந்தித்தனர்.

இச்சந்திப்பு தொடர்பில் கரு ஜயசூரிய எம்.பி கருத்து தெரிவிக்கையில்,

நாட்டின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு செயற்படுகின்ற அரசியல் கட்சியே ஐக்கிய தேசியக் கட்சி. இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழு சந்தித்தது.

அச்சந்திப்பில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாட்டிற்கு எதிரான விடயங்களை நாம் வலியுறுத்தவில்லை. ஜனநாயகம், சட்ட ஆட்சி, ஊடக சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பிலான யோசனைகளையே முன் வைத்தோம்.

17 ஆவது திருத்தச்சட்டத்தின் அவசியத்தை எடுத்துரைத்தோம். இன்று அரச துறைகள் அரசியல் மயமாக்கப்பட்டுவதற்கும் நல்லாட்சி வீழ்ச்சிக்கும் 17 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடான சுயாதீன ஆணைக்குழுக்கள் இல்லாதொழிக்கப்பட்டமையே பிரதான காரணமாகும்.

தகவல் தெரிந்து கொள்ளும் உரிமைகளை வலியுறுத்தினோம். உண்மையில் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் நாம் பேசிய போது நவநீதம்பிள்ளை அவற்றை சிறந்த முறையில் உள்வாங்கினார்.

விடுதலை புலிகள் ஒழிக்கப்பட்டதன் பின்னர் நாட்டில் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதனை நாம் தெளிவுபடுத்தினோம். அவற்றை ஏற்றுக் கொண்டு ஆக்கபூர்வமான செயற்பாடுகளின் அவசியத்தை அவர் வலியுறுத்தினார் எனக் கூறினார்.

இச் சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க, கரு ஜயசூரிய எம்.பி., ரவி கருணா நாயக்க எம்.பி., மங்கள சமரவீர எம்.பி., கொழும்பு மாநகர சபை மேயர் ஏ.ஜெ.எம். முசம்மில், கிழக்கு மாகாண எதிர்க்கட்சி தலைவர் தயாகமகே மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி சிறிநாத் பெரேரா ஆகியோர் சந்தித்தனர். (அ-2)

# அரசாங்கத்தை பாதுகாப்பது மக்களின் கடமை

**நாமல் எம்.பி. தெரிவிப்பு**



நாட்டைக் காப்பாற்றிய அரசாங்கத்தை பாதுகாக்கவேண்டியது இலங்கையில் வாழும் மக்களது கடமை என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

குருநாகல் கட்டுகம்பளை பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக்கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை மீட்கும் போராட்டத்தின் போது பெரும் பங்களிப்பை வழங்கிய வடமேல் மாகாண மக்கள் இம்முறையும் அரசாங்கத்திற்கு வாக்களிப்பது உறுதி.

மனிதவுரிமைகள் சம்பந்தமாக பேசும் சிலர் 1988, 1989ஆம் ஆண்டுகளில் வன்செயல் காலத்தில் இருந்த மனிதவுரிமைகளை மறந்து விட்டு பேசுவது நகைப்புக்குரியது.

பிரிவினைவாத நோக்கில் செயற்படும் சிலருக்கு உதவுவதற்காக தற்போது பல பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் கூறினார். (அ-2)


பன்னிரு ஜோதிலிங்க தரிசனம்
நல்லூரில் ஒரே இடத்தில் ஒரே சமயத்தில்
வீரமாகாளியம்மன் கோவில் மண்டபம்





வாகன உற்சவத்தன்று காலை
சனிக்கிழமை ஆரம்பம்
தினசரி காலை 8.00 மணி - இரவு 8.00 மணி
ஓகஸ்ட் 31 முதல் செப்டெம்பர் 07 வரை
ஏற்பாடு:
யாழ் பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையம்
211, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம் | 077-2612088



# சிறுவர் அரங்கம்

564

## உப்பு வியாபாரியும் கழுதையின் தந்திரமும்



முன்னொரு காலத்தில் ஒரு உப்பு வியாபாரி இருந்தான். அவன் தினந்தோறும் ஒரு கழுதையின் மீது உப்பு மூட்டைகளை ஏற்றி ஊருக்குள் போய் வியாபாரம் செய்துவருவான்.

போகும் வழியில் ஒரு ஆறு இருந்தது. அந்த ஆற்றைக் கடந்துதான் ஊருக்குள் போக வேண்டும்.

ஒருநாள் உப்பு வியாபாரி வழக்கம் போல கழுதையின் முதுகில் உப்பு மூட்டைகளை ஏற்றிக்கொண்டு வியாபாரத்திற்கு கிளம்பிச் சென்றான்.

வழியில் உள்ள ஆற்றை கழுதை கடந்தபோது எதிர்பாராமல் கழுதையின் கால்கள் வழுக்கிவிட்டனப. எனவே, கழுதை தடுமாறி ஆற்றுக்குள் விழுந்தது.

கழுதை தவறிவிழுந்ததால் அதன் முதுகில் இருந்த உப்பு மூட்டை நனைந்துவிட்டது. கழுதையை வியாபாரி மெல்லத் தூக்கிவிட்டான். ஆனால், நீரில் மூழ்கியதால் உப்பு மூட்டை நீரில் நனைந்தது.

ஒரு சில நிமிடத்தில் அப்படியே தண்ணீரில் கரை ந்து பாதி மூட்டையாகிவிட்டது. எனவே, கழுதை முதுகில் இருந்த உப்பு மூட்டை வெற்றுச் சாக்குப்போல எடையில்லாதபடி ஆகிவிட்டது. ஆஹா என்ன ஆச்சரியம் இப்பொழுது கழுதை முதுகில் சுமை இருந்ததே தெரியவில்லை.

கழுதைக்கு மிகுந்த சந்தோசம். ஆனால், வியாபாரிக்கு பெரிய நஷ்டம். உப்பு வியாபாரியும் உப்பு வியாபாரம் செய்ய வழியில்லாமல் கழுதையை ஓட்டிக்கொண்டு வீட்டிற்குத் திரும்பினான்.

மறுநாளும் வழக்கம் போல வியாபாரி உப்புவியாபாரத்திற்குக் கிளம்பினான். கழுதை முதுகில் இருந்த உப்பு மூட்டை கழுதைக்கு கனமாக இருந்தது.

கழுதை மெல்ல நடந்து ஆற்றுப்பால் அருகே வந்தது. திடீரென் அதற்கு முந்தைய நாள் நினைவு வந்தது. எனவே, மெல்லத் தடுமாறுவது போல செய்து சட்டென்று ஆற்றுக்குள் விழுந்தது. அடுத்த நிமிடம் கழுதை முதுகில் இருந்த உப்பு மூட்டை நீரில் கரைந்துவிட்டது. இன்றும் கழுதைக்கு முதுகில் சுமை இல்லாது போய்விட்டது.

கழுதை தனது தந்திரத்தால் தொடர்ந்து இதையே செய்து வந்தது. இதனால் தினமும் வியாபாரத்திற்குப்போக முடியாது வியாபாரி தொடர்ந்து சிரமம் கொண்டான்.

ஒருநாள் வியாபாரி வழக்கம் போல கழுதையின் முதுகில் உப்பு மூட்டைகளை ஏற்றிக்கொண்டு வியாபாரத்திற்கு கிளம்பிச் சென்றான். செல்லும் வழியில் கழுதை கொண்டு வருகின்ற உப்பு எப்படி காணாமற் போகின்றன என்று யோசித்துக்கொண்டே கழுதையின் நடவடிக்கைகளைக் கவனித்தன.

கழுதை வேண்டுமென்றே ஆற்றுக்குள் விழுந்தது. அவனுக்கு மெல்ல மெல்ல கழுதையின்தந்திரம் புரிந்தது. எனவே, அதற்கு ஒரு நல்ல பாடம் கற்பிக்க நினைத்தான். அன்று கழுதை முதுகில் வழக்கம் போல உப்பு மூட்டையை ஏற்றவில்லை வியாபாரி.


மாறாக பஞ்சு நிறைந்த ஒரு சாக்கு மூட்டையை கழுதை முதுகில் ஏற்றினான். கழுதை வழக்கம்போல ஆற்றுப் பாலத்தின் அருகே வந்தது. எதிர்பாராமல் கால் தடுமாறுவதுபோல தடுமாறி ஆற்றிற்குள் விழுந்தது.

மூட்டையில் இருந்த பஞ்சு நீரில் நனைந்தது. அட கஷ்டமே!


கழுதையின் முதுகிலிருந்த பஞ்சு மூட்டை முன்பை விட அதிகமாக கனத்தது. கழுதையும் மிகவும் கஷ்டப்பட்டு ஆற்றைக் கடந்து கரைக்கு வந்து சேர்ந்தது.

தனது ஏமாற்றுவேலை இவ்வளவு நாள் தன்னைக் காப்பாற்றி வந்த வியாபாரிக்குத் தெரிந்துவிட்டதை எண்ணி வெட்கப்பட்டது. இனிநேர்மையாக நடக்க முடிவெடுத்தது.

நாமும் நம்மை நம்பியவர், நம்பாதவர் யாரையும் ஏமாற்றக்கூடாது. அப்படிச் செய்தால் ஒருநாள் நம் செயல் அவர்களுக்குத் தெரிய வரும். அன்று அவமானம் அடையும் நிலை வரும். அதற்கான தண்டனையும் நமக்குக் கிடைக்கும்.



## வேடம் போட்ட கழுதை



ஒரு சலவைத் தொழிலாளியிடம் கழுதை ஒன்று இருந்தது. அந்தக் கழுதைக்கு தேவையான தீவனத்தை வைக்க முடியவில்லை. வயிறார புல்மேய்வதற்கு மேய்ச்சல் நிலமும் இல்லை.

இதன் காரணத்தால் கழுதை நாளுக்கு நாள் மெலிந்து கொண்டே வந்தது. சலவைத் தொழிலாளி கழுதையின் நிலை கண்டு மிகவும் கவலைப்பட்டான்.

ஒருநாள் சலவைத் தொழிலாளி காட்டுவழியாக நடந்து வந்துகொண்டிருந்தபோது ஒரு சிங்கம் செத்துக்கிடப்பதைக் கண்டான்.

அதைக் கண்டதும் சலவைத் தொழிலாளிக்கு ஒரு யோசனை தோன்றியது.

இந்தப் சிங்கத்தின் தோலை உரித்து அதைக் கழுதையின் மீது போத்தி நெல்வயல்களில் விட்டு மேயச் செய்தால் உண்மையாகவே சிங்கம் மேய்வதாக எண்ணிப் பயந்து கொண்டு வயலுக்குச் செல்லாது சொந்தக்காரர்கள் பேசாமலிருந்து விடுவார்கள். கழுதையும் வயிறார மேயும் என்று சலவைத் தொழிலாளி நினைத்துக் கொண்டான்.

இறந்து கிடந்த சிங்கத்தைத்தூக்கிக் கொண்டு அவன் வீட்டிற்குச்சென்றான். அன்று இரவு சிங்கத்தின் தோலை உரித்தான். மறுநாள் கழுதையின் மீது அத்தோலைப் போர்த்தி விளைந்திருந்த வயல்கள் பக்கமாக போகச் செய்தான்.

சிங்கம் தான் பயிரை மேய்கிறது என்று எண்ணிக் கொண்டு குடியானவர்கள் அதை விரட்டப் பயந்து கொண்டு பேசாமலிந்து விட்டார்கள்.

கழுதை விளைநிலத்தில் அன்றாடம் வயிறார மேய்ந்து நன்றாக கொழுத்து விட்டது. ஒருநாள் அது அந்நெல்வயலில் மேய்ந்து கொண்டிருந்தது. அப்போது அந்தப் பக்கமாக வந்த ஒரு பெண் கழுதை உரத்த குரல் எடுத்து கத்தத் தொடங்கியது. அப்போது அதைக் கேட்ட ஆண்கழுதை பெண் கழுதையின் குரலைக் கேட்டதும் உற்சாகமடைந்து தானும் உரத்த குரல் எடுத்து கத்தத் தொடங்கிவிட்டது. குடியானவர்களுக்கு உண்மை விளங்கிவிட்டது. எல்லோரும் ஒன்று சேர்ந்து சிங்கம் போல வேடம் போட்ட கழுதையை அடித்துக்கொன்று விட்டார்கள்.



# பெரும்பான்மை இன மக்களாலும் நேசிக்கப்பட்ட 'தர்மர்'

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் தன்னலமற்ற சேவையாலும் இலட்சியப் பற்றாலும் மக்களைக் கவர்ந்து தனது செல்வங்களையும் ஏழை மக்களுக்கும் பொது ஸ்தாபனங்களுக்கும் வழங்கி இருபத்துமூன்று வருடங்கள் தொடர்ச்சியாக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து மக்களின் இதயங்களில் நீங்காத இடத்தைப் பெற்ற அமரர் விஸ்வநாதர் தர்மலிங்கம் அவர்களின் இருபத்தெட்டாவது சிரார்த்த தினம் இன்றாகும்.

தமிழையும் வைசத்தையும் இறுகக் கடைப்பிடிக்கின்ற மிகவும் செல்வமான குடும்பத்தில் 1918 ஆம் ஆண்டு மாசி மாதம் 5 ஆம் திகதி பிறந்தவர்தான் தர்மலிங்கம். குடும்பத்தின் ஏக வாரிசான இவர் உறவினர், நண்பர்கள் மற்றும் மக்கள் மத்தியில் **இலங்கையர்** என்றும் **தர்மர்** என்றும் அழைக்கப்படுவதுண்டு. இவரின் தந்தையார் விஸ்வநாதர் அமெரிக்கா சென்று முதுமாணி பட்டம் பெற்ற கல்விமான் என்பது குறிப்பிடத்தக்கது.

அமரர் தர்மரின் பெற்றோர் இவரின் சிறு வயதிலேயே இறந்தமையால் இவரின் பெரிய தந்தையான டாக்டர். சி.சுப்பிரமணியம் தாய் போலவும் தந்தை போலவும் இருந்து கண்ணை இமை காப்பது போல இவரை வளர்த்து அக்காலத்தில் தலைசிறந்த கல்லூரியாக விளங்கிய சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் கல்வி புகட்டினார்.

அக்கல்லூரியின் அதிபராக அப்பொழுது இருந்த வணபிதா லோங் (Father Long) அடிகளார் தர்மர் மீது மிகுந்த பற்றும் பாசமும் உடையவராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று பலர் அரசியலில் குதித்து அதிரடியாக நாடாளுமன்ற உறுப்பினராக திகழ்கிறார்கள். ஆனால், தர்மர் சிறுவயது தொடக்கம் சமூக சேவையில் தன்னை அர்ப்பணித்து பின்பு உடுவில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினராகவும் பின்னர் அதன் தலைவராகவும் சிறப்பாகக் கடமையாற்றியவர்.

1952 ஆம் ஆண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சி முதன் முதலாக தேர்தல் களத்தில் இறங்கிய வேளை தந்தை செல்வா காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிட்டபோது அவரை ஆதரித்து தனது தலைமையில் ஓர் மாபெரும் கூட்டத்தை நடத்தி தமிழரசுக் கட்சி மீதுள்ள பற்றை வெளிப்படுத்தினார்.

இத் தேர்தலில் இவரை வளர்த்தெடுத்த பெரிய தந்தையார் ஐ.தே. கட்சியை ஆதரித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவரான கோப்பாய் நாடாளுமன்ற உறுப்பினர் கோப்பாய் கோமான் சி.வன்னியசிங்கம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த சீ.கதிரவேற்பிள்ளை ஆகியோர் தர்மரின் நெருங்கிய உறவினர்களாவர்.

1960 ஆம் ஆண்டு மார்ச் மாதம் உடுவில் என்ற பெயரில் புதிய தொகுதி உருவாக்கப்பட்டது. அப்பொழுது இத் தொகுதியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளராக வருவதற்கு பலர் விண்ணப்பத்திருந்தார்கள். ஆனால், வேட்பாளர் தெரிவை நுணுக்கமாக ஆராய்ந்த தந்தை செல்வாவின் தலைமையிலான நியமனக் குழு தர்மர் தான் இத் தொகுதிக்கு பொருத்தமான வேட்பாளர் என அவரைத் தெரிவு செய்தது. அத்தேர்தலில் தர்மர் பல்லாயிரக்கணக்கான வாக்குகளால் வெற்றிவாகை சூடினார். இத் தேர்தலில் இவருடன் பல கல்விமான்களான ஹன்டி பேரின்பநாயகம், அதிபர் வீ.வீரசிங்கம், சட்டத்தரணி ஆசீர்வாதம் போன்றவர்களும் போட்டியிட்டு படுதோல்வி அடைந்தனர். அன்று தொடக்கம் உடுவில் மற்றும் மானிப்பாய் தொகுதிகளின் நாடாளுமன்ற உறுப்பினராக தொடர்ச்சியாக இருபத்துமூன்று ஆண்டுகள் மக்களுக்கு சேவையாற்றி 1983 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பு திருத்தச் சட்டமூலத்திற்கு அமைவாக சத்தியப்பிரமாணம் செய்ய மறுத்து தனது நாடாளுமன்றப் பதவியைத் துறந்தார்.

அமரர் தர்மர் சகல தரப்பினர்களோடும் அன்பாகவும் பண்பாகவும் பழகுபவர். கிராம மட்டத்தில் அவர் காட்சிக்கு எளியவராகவும் எல்லா மக்களும் மனம் திறந்து பேசக் கூடியவராகவும் இருந்தார். சர்வதேச மட்டத்தில் அவர் சமதர்ம நாடுகளின் நண்பனாகவும் சோஷலிச போராட்டங்களின் ஆதரவாளராகவும் இருந்தார்.

1970 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் அப்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளர் நாயகமாக இருந்த தளபதி அ.அமிர்தலிங்கம் வட்டுக்கோட்டைத் தொகுதியில் தோல்வியடைந்தார்.

அன்று தொடக்கம் 1977 ஆம் ஆண்டு வரை அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் இல்லாத குறையை தர்மரே நிறைவு செய்தார். இக்காலத்தில் 1971 ஆம் ஆண்டளவில் அப்போது அமைச்சராக இருந்த கொல்வின் ஆர்.டி.சில்வா தலைமையில் இயங்கிய அரசியல் நிர்ணய சபைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி சமர்ப்பித்த அரசியல் யாப்பை வரைவதில் ஈடுபட்டு தகுந்த ஆதாரங்களுடனும் புள்ளி விபரங்களுடன் பாராளுமன்றத்தில் சொற்பொழிவாற்றியதை பலரும் பாராட்டினார்கள்.

இந்த நாட்டில் தமிழ் பேசும் மக்கள் அடக்கியொடுக்கப்பட்டு வாழ வழியின்றி தவிக்கும் வேளையில் மொழி காக்க, இனம் காக்க, பிரதேசம் காக்க, பாரம்பரியம் சிதைவுறாது பேணிக்காக்க இலங்கைத் தமிழரசுக் கட்சியால் மட்டுமே முடியும் எனக் கொண்டு இனவாதம் இல்லாது செயற்பட்டார்.

அந்நேரம் இவரை இலங்கைத் தமிரசுக் கட்சியில் இருக்கும் இடதுசாரி போக்காளர் எனவும் கூறுவதுண்டு. அமரர் தர்மர், சிங்கள மக்களாலும் நேசிக்கப்பட்டவர். ஏனெனில் தர்மரை சிங்களத் தலைவர்களும் அறிஞர்களும் ஒருமனதாக ஆசிய ஆபிரிக்க விடுதலை இயக்கத்தின் மூத்த அங்கத்தவராகவும் சோவியத் நட்புறவுச் சங்கத்தின் முக்கியஸ்தராகவும் தெரிவு செய்ததிலிருந்து தர்மரை ஒரு தேசியத் தலைவராக பெரும்பான்மை இன மக்களும் ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது.

1972 ஆம் ஆண்டுக்குப் பின்பு அப்போதிருந்த அரசினால் தமிழ் இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சிறைக்கூடங்களில் வைத்த நேரத்தில் அவ் இளைஞர்களின் குடும்பத்தினரின் கஷ்டத்தை போக்கும் நோக்கில் வீடு வீடாகச் சென்று ஆறுதல் கூறி உதவியும் புரிந்தது மாத்திரமின்றி சர்வதேச மன்னிப்புச் சபையிடம் (Amnesty International) முறையிட்டு அவர்களை விடுதலை செய்ய உதவிய உத்தமர் இவர்.

இன்றைய காலகட்டத்தில் அரைப் பரப்பு காணிக்காக கோடேறி வழக்காடுகிறார்கள். ஆனால், தர்மரின் புதல்வன் சித்தார்த்தன் தமிழ் மாணவர்களின் நன்மை கருதி கோப்பாய் கிராமத்தில் தங்கள் சொந்தக் காணி 200 பரப்பு நிலத்தை கல்விக் கல்லூரி அமைக்க இலவசமாக வழங்கியுள்ளார்.

அக்கல்லூரி இன்று கம்பீரமாக காட்சி தந்து வருடாவருடம் நூற்றுக்கணக்கான ஆசிரியர்களை உருவாக்குவது யாவரும் அறிந்ததே.

அக்கல்லூரியின் முகப்பில் தர்மரின் உருவச் சிலையும் அவர் நினைவாக மண்டபம் ஒன்றும் காட்சியளிப்பது வரவேற்கத்தக்கது.

உலக வரலாற்றில் உன்னதமான இலட்சியத்துக்கு அயராது உழைத்த பல பெரியார்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். அந்த வரிசையில் மகாத்மாகாந்தி, ஜோன் எவ் கென்னடி, இந்திரா காந்தி, ராஜீவ்காந்தி இன்னும் பலர்.

அந்த வரிசையில் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்காக முழு நேரமாக ஊழியம் செய்து உன்னதமான இலட்சியத்தை அடைய பாடுபட்ட எங்கள் அருந்தலைவர் தர்மலிங்கம் 02.09.1985 அன்று கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதை எவருமே நியாயப்படுத்த முடியாது.

தர்மர் கொலை செய்யப்பட்டார் என்ற செய்தியை அப்போதைய தமிழக முதல்வர் மு.கருணாநிதி கேள்வியுற்று இச் செயல் **கொடுமையானது** என்றும் **கொடூரமானது** என்றும் செய்தி வெளியிட்டிருந்தார்.

அன்றைய காலகட்டத்தில் வெளிநாடுகளுக்கு செல்லாது மக்களோடு மக்களாக வாழ்ந்த பல தலைவர்களை; புத்திஜீவிகளை ஆயுததாரிகள் கொலை செய்துள்ளார்கள். இந்தக் கொலைகளை விசாரிப்பதற்கு சர்வதேசமோ அல்லது மனித வுரிமைக் குழுக்களோ எதுவித அக்கறையும் காட்டியதாக தெரியவில்லை.

அரசியலிலும் சரி தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரி எதிரிகள் எவருமே இல்லாத தர்மலிங்கம் அவர்களின் உடலை ஆயுததாரிகள் அழித்தாலும் மக்களின் இதயங்கலிலிருந்து அவர் நினைவையும் அவர் கொண்ட இலட்சியத்தையும் என்றுமே அழிக்க முடியாது.

**ஆ.சி.கணேசவேல் (ஜே.பி)**
**ஆனைக்கோட்டை.**

# தேரரை தூக்கி வலம் வந்த பிரதேச மக்கள்

வெலிவேரிய விவகாரம் குறித்து உண்ணாவிரதம் இருந்த தெரிபெஹே ஸ்ரீதம்ம தேரர் தனது உண்ணாவிரதத்தை கைவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொழிற்சாலைக்கு முன்பாக தேரர் நேற்று முன்தினம் மாலை தனது உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருந்தார்.

இந்நிலையில் குழு அறிக்கை கிடைக்கும் வரை தொழிற்சாலையை மூடுவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டதையடுத்தே தேரர் தனது உண்ணாவிரதத்தைக் கைவிட்டார்.

கொழும்பு மாவட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனாநாயக்க தேரருக்கு இது தொடர்பில் அறிவித்ததையடுத்தே அவர் தனது உண்ணாவிரதத்தைக் கைவிட்டுள்ளார்.

அத்துடன் உண்ணாவிரதம் இருந்த தெரிபெஹே ஸ்ரீதம்ம தேரரை பிரதேசவாசிகள் தூக்கிக்கொண்டு ஊர் முழுவதும் வலம் வந்துள்ளனர்.

தொழிற்சாலை இயங்குவதற்கு எதிர்ப்பு



தெரிவித்து தேரர் நேற்று முன்தினம் மாலை மீண்டும் உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருந்தார்.

இந்நிலையில் நேற்று குழு அறிக்கை கிடைக்கும்வரை தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கு முடிவெடுக்கப்பட்டது.

இம்முடிவின் பின்னர் தேரர் உண்ணாவிரதத்தை கைவிட்டார். இதனையடுத்து மக்கள் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் பொருட்டு தேரரைத் தூக்கி ஊர்முழுவதும் வலம் வந்துள்ளனர். (அ-2)




(EC-4937)

# நவநீதம்பிள்ளையினது வருகையின் எதிரொலி

வடக்கு, கிழக்கில் காணாமற் போயுள்ளதாகக் கூறப்படும் 2 ஆயிரத்து 550 பேர் தொடர்பான விசாரணைகளை உடனடியாகத் தொடங்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் என்.பெர்ணான்டோ பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தவிட்டுள்ளார். பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர், காணாமற்போனவர்களின் பெயர் விபரங்கள் அடங்கிய இரகசிய ஆவணத்தை நீதிமன்றத்தில் கையளித்தார். அதனை நீதிமன்றத்தில் பாதுகாப்பாக வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

காணாமற்போயுள்ள 2550 பேர் தொடர்பில் சிறப்பு விசாரணைகளை நடத்த வேண்டுமென பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் விடுத்த கோரிக்கையை கவனத்தில் எடுத்துக்கொண்ட நீதவான் அதற்கான அனுமதியை வழங்கினார்.

அத்துடன் விசாரணைகளின் முன்னேற்ற அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் அவர் உத்தரவிட்டார்.

இது ஐ.நா. மனித உரிமை ஆணையர் நவநீதம்பிள்ளையின் வருகையின் நிமித்தம் எடுக்கப்படும் ஒரு கண்துடைப்பு நடவடிக்கை என்றே எண்ண வேண்டியுள்ளது.

இதேசமயம் இறுதிப்போரின் போது இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமற் போயிருப்பவர்கள் தொடர்பில் வவுனியா மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 5 ஆட்கொணர்வு மனுக்கள் தொடர்பான விசாரண்ணைகள் ஓகஸ்ட் 26.2013 அன்று நடைபெற்றுள்ளது. போரின் முடிவில் இலங்கைப் படையினரிடம் சரணடைந்த தமது உறவுகள் எங்கே என்று கண்டுபிடிக்கக் கோரி அவர்களின் உறவினர்கள் இந்த ஆட்கொணர்வு மனுக்களை சமர்ப்பித்துள்ளனர்.

2009 மே 18 ஆம் நாள் முல்லைத்தீவு செல்வபுரத்தில் இலங்கை படையினிடம் சரணடைந்த 800 பேர் பேருந்து ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்டதாகவும் அவர்கள் எங்கே என்பது இன்றுவரை தெரியவில்லை என்றும் மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அதேவேளை, மேலும் புதிதாக 7 ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு அவை நீதிமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த ஆட்கொணர்வு மனுக்களில் பல புதிய செய்திகள் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கப் பட்டிருப்பதாக இந்த வழக்குகள் சார்பில் நீதிமன்றத்தில் தோன்றிய மூத்த சட்டத்தரணி கே.எஸ். ரட்ணவேல் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின், முன்னாள் திருகோணமலை அரசியற்றுறை பொறுப்பாளர் எழிலன் உட்பட்டவர்கள் சார்பிலான முதல் 5 ஆட்கொணர்வு மனுக்கள் தொடர்பில் எதிர்மனு தாக்கல் செய்வதற்கு எதிரணித் தரப்பினருக்கு கடைசி சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. இன்னும் இரு நாட்களில் அந்த எதிர்மனு தாக்கல் செய்யப்படும் என்று அரச தரப்பு சட்டத்தரணி தெரிவித்தையடுத்து நீதிமன்றம் இந்த வழக்குகளை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதிக்கு தள்ளி வைத்திருக்கின்றது.

இறுதிப் போரின் போது இந்தியக் கொடி தாங்கிய கப்பலில் இருந்து கரையில் பொதுமக்கள் பகுதி மீது குண்டுகள் வீசப்பட்டதாக, வவுனியா நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு ஒன்றில் கூறப்பட்டிருப்பதாக சட்டத்தரணி ஒருவர் தெரிவித்துள்ளார். இந்த மனுக்களை இராணுவத்திடம் சரணடைந்து காணாமற்போயுள்ளவர்களின் குடும்ப உறவினர்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றார் சட்டத்தரணி இரட்ணவேல்.

அதுமட்டுமன்றி கொத்துக்குண்டுகளும் இராசயன குண்டுகளும் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ள மனுதாரர்கள் தங்களின் கண்முன்னிலையிலேயே இவற்றால் பாதிக்கப்பட்டவர்களுடைய முகங்கள், உடல்கள் விகாரமடைந்து, துன்பமடைந்து அவர்கள் மரணமடைந்ததைக் கண்டதாகவும் முதன் முறையாகத் தெரிவித்திருக்கின்றார்கள் என்றும் சட்டத்தரணி இரட்ணவேல் தெரிவித்தார்.

இந்த வழக்குகள் யாவும் எதிர்வரும் 12 ஆம் நாளுக்கு நீதிமன்றத்தினால் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன.

போர்க்காலத்திலும் போர் முடிந்த பின்னரும் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் காணாமல் போயுள்ளார்கள். இதில் யாதொரு தடயமும் இல்லாமல் காணாமற் போனவர்கள் இருக்கிறார்கள். இராணுவம் கைது செய்தபின்னர் காணாமற் போனவர்களும் இருக்கிறார்கள்.

காணாமற் போனவர்களின் எண்ணிக்கை 2,550 என்பது பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்துக்குக் கொடுத்திருக்கும் தகவல். ஆனால், உண்மையான எண்ணிக்கை இதைவிட பல மடங்கு அதிகமாக இருக்கும். பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினர் கொடுத்திருக்கும் பட்டியல்கூட இரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறது. இது பகிரங்கப்படுத்தினால் மட்டுமே யார் யார் காணாமல் போனவர்கள் பட்டியலில் இருக்கிறார்கள், யார் யார் அந்தப் பட்டியலிலில்லை என்ற உண்மை வெளிவரும்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசு தரப்பும் பேச்சுவார்த்தை நடத்திய காலத்தில் காணாமல் போனவர்களது பட்டியல் வவுனியாவில் வைத்து வெளியிடப்படும் என ஒரு முறைக்கு இருமுறை வாக்குறுதி அளிக்கப்பட்டது. த.தே.கூ. மற்றும் பாதிக்கப்பட்ட மக்கள் வவுனியாவில் குறித்த நாட்களில் காத்திருந்தார்கள். ஆனால், வாக்குறுதி அளித்தவாறு பட்டியல் வெளியிடப்படவில்லை. மக்கள் ஏமாந்தார்கள் அல்லது ஏமாற்றப்பட்டார்கள்.

முப்பது ஆண்டுகால ஆயுதப் போர் முடிவுக்கு வந்தபோது இராணுவம் விடுதலைப்புலிகளின் மூத்த தளபதிகளையும் போராளிகளையும் பொது மக்களையும் சரண் அடையுமாறு அறிவித்தது. இந்த அறிவித்தலை அடுத்து மே 16, 17, 18, நாட்களில் ஆயுதங்களை மௌனித்துவிட்டு விடுதலைப்புலிகள் இராணுவத்திடம் சரண் அடைந்தார்கள்.


மே 18, 2009 அதிகாலை அரசியற்றுறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தலைமையில் திருமதி நடேசன், தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் கிழக்கு மாகாண சிறப்புத் தளபதி கேணல் ரமேஷ், தமிழீழ காவற்றுறையின் பொறுப்பாளர் இரமேஷ் (இளங்கோ), சமாதான செயலகத்தின் பொறுப்பாளர் சீவரட்ணம் புலித்தேவன் மற்றும் 300 போராளிகள் வெள்ளைக் கொடியுடன் சரண் அடைந்தார்கள்.

இவர்களது சரண் ஐ.நா. அதிகாரி விஜய நம்பியாரின் மேற்பார்வையில் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக விஜய் நம்பியார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்புச் செயலர் ஆகியோருடன் பேசினார். விடுதலைப் புலிகள் வெள்ளைக் கொடியுடன் சரண் அடையுமாறு அறிவுறுத்தப்பட்டது.

அரசியற்றுறைப் பொறுப்பாளர் ப.நடேசன் உட்பட தமிழீழ காவற்றுறைப் பொறுப்பாளர் ரமேஷ் அவர்களும் இலங்கை இராணுவத்திடம் மே 18 காலை சரணடைந்ததாக அன்றைய வெளியுறவுச் செயலர் பாலித கோஹன தெரிவித்திருந்தார். ஆனால், பின்னர் அதனை அவர் மறுத்துவிட்டார்.

மே 18 காலை மக்களுடன் மக்களாக சரணடைந்த பா. நடேசன், கேணல் இரமேஷ், புலித்தேவன் போன்றோர் உயிருடன் இருக்கின்றனரா? இல்லையா? என்ற சர்ச்சை நீடித்துவந்த பின்புலத்தில் பா.நடேசன் ஆகியோருடன் இலங்கைப் படையினரது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் சென்றதாக நம்பப்படும் கேணல் ரமேஷ் அவர்களை படையினர் தடுத்து வைத்து கடும் தொனியில் விசாரணை செய்யும் காணொளிகள் வெளிவரத் தொடங்கின.

கேணல் ரமேசையும் இலங்கை இராணுவம் மே மாதம் 22 ஆம் நாள் விசாரணைக்கு உட்படுத்தியது. அப்போது எடுக்கப்பட்ட காணொளிகள் வெளியாகி இருந்தன. அதில்



ரமேஷ் அவர்கள் சாதாரண உடையில் இருந்தார். ஆனால், விசாரணை நடைபெறும் வேளை அவரை இலங்கை இராணுவம் இராணுவ உடையை போடச் சொல்கிறது. அதனை அடுத்து அவர் இராணுவத்தின் சீருடையை அணிகிறார். அக்காட்சிகள் தெள்ளத் தெளிவாக காணொளியில் பதிவாகியுள்ளது. இராணுவத்தின் சீருடையை அவர் அணியும் போது அவரை டேய் என்று விளித்து இராணுவம் அவமானப்படுத்துகிற காட்சியும் பதிவாகியுள்ளது.

இராணுவம் தன்னை விசாரணை செய்யும். ஆனால், அடித்துக் கொலை செய்யும் என இரமேஷ் எதிர்பார்த்திருக்க மாட்டார். அதனால் தன்னைக் கொலை செய்ய இராணுவம் முடிவு செய்துவிட்டது என்பது ரமேஷ் அவர்களுக்கு தெரிந்திருக்கவில்லை. இராணுவம் ஏதோ அவரிடம் முழுப்பெயரைக் கேட்டுத் தெரிந்துகொண்டு அதனை எழுதி விசாரணை நடத்துவது போல நாடகமாடியது. சரணடைந்த தன்னை இராணுவம் கொல்லாது என நினைத்த தளபதி ரமேஷ் அவர்களை இலங்கை இராணுவம் கடுமையாக தாக்கி வதை செய்து கொலை செய்தது. விசாரணையின் போது அவர் அணிந்த இராணுவ உடையில்தான் அவர் இறந்து கிடக்கும் புகைப்படம் வெளியானது. இந்தப் புகைப்படத்தை வெளியிட்ட தமிழ் நெட் இணையம் குறிப்பிட்ட படத்தை தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளி ஒருவர் அடையாளம் காட்டி உறுதி செய்திருப்பதாகவும் தெரிவித்தது.

இதனைத் தொடர்ந்து பா.நடேசன், சீவரட்னம் புலித்தேவன் தீக்காயங்களுடன் இறந்து கிடக்கும் புகைப்படங்கள் ஊடகங்களில் வெளிவந்தது. இவர்களும் ரமேஷ் போலவே சித்திரவதைக்குப் பின்னர் கொல்லப்பட்டிருக்க வேண்டும்.

பா.நடேசனோடு இலங்கை இராணுவத்திடம் சரண் அடைந்த தமிழீழ காவற்றுறையின் பொறுப்பாளர் ரமேஷ் இளங்கோ மற்றும் நடேசனின் துணைவியார் என்ன ஆனார்கள் என்பது குறித்து தகவல் எதுவும் இல்லை. அவர்களும் கொல்லப்பட்டிருக்க வேண்டும்.

போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கை படையினரிடம் சரணடைந்த விடுதலைப்புலிகளின் எண்ணிக்கை தொடர்பாக நிலவும் குழப்பத்தை, பாதுகாப்புச் செயலர் நிகழ்த்திய உரை தெளிவுபடுத்தியுள்ளது.

ஓகஸ்ட் 08,2012 அன்று கொழும்பு கலதாரி விடுதியில் நடைபெற்ற பாதுகாப்புக் கருத்தரங்கில் உள்நாட்டு, வெளிநாட்டு அதிகாரிகள் மத்தியில் இலங்கை பாதுகாப்புச் செயலர் உரையாற்றும் போது போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்த விடுதலைப்புலிகள் தொடர்புள்ள புள்ளிவிபரங்களை வெளியிட்டார்.

புள்ளி விபரங்களின் அடிப்படையில் போரின் முடிவில் 11,989 விடுதலைப்புலிகள் சரணடைந்ததாகவும் அவர்களுள் இதுவரை 10, 965 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் 636 விடுதலைப்புலிகள் இன்னமும் மருதமடு, கண்டக்காடு, வெலிக்கந்த, பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களை விட மேலும் 383 விடுதலைப் புலிகள் சட்ட நடவடிக்கைகளுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ள மற்று தற்போதும் தடுப்பிலுள்ள விடுதலைப்புலிகளின் மொத்த எண்ணிக்கை 11,984 பேர் மட்டுமேயாகும்.

இதனால் போரின் இறுதியில் சரணடைந்த 11,989 விடுதலைப் புலிகளில் 5 பேரின் நிலை என்ன என்ற கேள்வி எழுகிறது.

போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்த விடுதலைப்புலிகள் பலரது நிலை இன்னமும் அறியப்படாதுள்ள நிலையில் அவர்களில் பலர் கொல்லப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியான நிலையில் இலங்கை பாதுகாப்புச் செயலர் அளித்துள்ள புள்ளிவிபரங்களே அந்தக் குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்துவதாக அடைந்துள்ளது.

அடுத்து ஊடகவியலாளர் மேரி கொல்வின் பா. நடேசனும் புலித்தேவனும் தன்னோடு செய்மதி தொலைபேசியில் தொடர்புகொண்டு வி.புலிகள் ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு சரணடைய விரும்புவதாகவும் அதற்கான ஒழுங்குகளை செய்யுமாறு தன்னைக் கேட்டதாகவும் அதன் பின்னர் அது தொடர்பாகத் தான் எடுத்த முயற்சிகளை சண்டே ரைம்ஸ் ஏட்டுக்கு எழுதிய கட்டுரையில் விபரித்திருந்தார்.

நக்கீரன்

# சதுரகிரி மகாலிங்கம் மலை



ஆன்மீகம் 104

உலகில் எத்தனையோ மலைகள் உண்டு. மதுரை அருகில் 40 கி.மீ. தூரத்தில் சதுரகிரி மகாலிங்கம் மலை மகா சக்தி வாய்ந்ததாக இன்றும் இருக்கிறது.

என் குரு ஸ்ரீ காகமுனிவர் அருளால் தொடர்ந்து இருபது வருடமாக இம்மலைக்குச் செல்லக் கூடிய பாக்கியம் பெற்றுள்ளேன்.

இந்த மலை சாதுக்களால் கண்டு பிடிக்கப்பட்டாலும் இங்கு இருக்கும் சித்தர்கள், அருள்நாடி எவ்விடமும் செல்வதில்லை. அருளே வடிவான ஆனந்த சதுரகிரி மகாலிங்க மலையைத் தேடித்தான் அநேக நாடுகளிலிருந்து கோடான கோடி சித்தர்கள் வருகிறார்கள்.

தற்சமயம் இந்த இடம் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ் நிர்வாக அதிகாரியால் நிர்வகிக்கப்படுகிறது.

இந்த மலையை மட்டும் தரும சிந்தனையுடன் சித்தர்களை வேண்டி ஆட்சிக்கு வந்த அவர்க்ள முழு மனத்துடன் செயற்பட்டால் தமிழகமும் இந்தியாவும் உலக அளவில் அருளும் பொருளும் நிறைந்த நாடாய் விளங்கும்.

ஆனால், எனக்குத் தெரிந்து இதுவரை தரும் சிந்தனையுடன் ஆன்மீக நெறியில் எந்த அதிகாரியும் இம்மலையில் செயற்பட்டதாகத் தெரியவில்லை. இவர்கள் சாதுக்களை மதிப்பதில்லை.

சந்தன மகாலிங்க மலையில் வயதானவர்கள் சறுக்கி விழுகின்றார்கள். அதிகாரிகள் அதைக் கண்டு கொள்வதில்லை. ஆடி அமாவாசை மட்டும் குறைந்தது ஐந்த லட்சம் மக்களுக்கு ஆங்காங்கே உள்ள சாதுக்களின் அருளாசி பெற்ற சீடர்களும் தருமம் செய்யக் கூட விடுவதில்லை. பிஸ்தா போல் செயற்படுகிறார், அங்கு இருக்கும் நிர்வாக அதிகாரி. உண்டியல், டிக்கட், சூரை விடும் தேங்காய் கரும வினைகள் தீர்க்க தேய்காய் உடைப்பது. அதனைப் பல குழந்தைகளும் பெரியவர்களும் சாப்பிட ஓரளவு கரும வினை தீரும். அதைக் கூட தரும சிந்தனையே இல்லாத நிர்வாகி சிதறுகாய் ஏலம் விட்டு பிழைப்பு நடத்துவது தான் செய்த பாவத்தை கழிக்கத் தன் தலை முடியைக் காணிக்கை கொடுக்கும் பக்தர்க்ள முடியை பல ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் விட்டு அந்தப் பணத்தையும் கொள்ளை அடிக்கும் நிர்வாகியை என்னதான் சொல்வது? எப்படித்தான் நினைப்பது?



சதுரகிரி மகாலிங்க மலையில் திரு.வி.ராமதாஸ் ஐ.எ.ஸ் கமிசனருடன் அன்னை சித்தர் யாகம் செய்தல் உடனே மழை வருதல்

புண்ணியம் நிறைந்த சதுரகிரி மலையில் இருக்கும் சித்தர்கள் வேறு எந்த உலகத்திற்கும் போவது கிடையாது. ஆனால், உலகத்தில் உள்ள அனைத்துச் சித்தர்களும் சதுரகரிமலை வந்த அங்கு இருக்கும் சித்தர்களின் அருளைப் பெறுவது ஆடி அமாவாசை அன்றுதான்.

இந்த இரவு நேரம் சித்தர்கள் வரும்போது இந்த நாட்டை ஆளும் அரசர், அரசுச் செயலர், அரசு ஆணையர், இந்து சமய அறநிலைய அறங்காவலர்கள் அம்மலையில் ஒன்று கூடி நாட்டுக்கு வேண்டிய நிதியும் காவேரி நதியும் பாய்ந்தோட வேள்வியும் வேண்டுதலும் மனம் உருகிச் செய்திட வேண்டும்.

ஆனால், இதுவரை அப்படி எந்த ஆணையரும மந்திரியும் உண்மையாக அங்கு போனதாய் என் இருபது வருட வரலாற்றில் கிடையாது.


அடியேன் எடுத்த பெருமுயற்சியால் கமிசனர் வி.ராமதாஸ் ஐ.ஏ.எஸ் அரசுச் செயலர் திரு. சண்முக சிகாமணி மட்டுமே வந்து அந்த இடத்தின் பெருமையை உணர்ந்தனர்.

ஒவ்வொரு ஆடி அமாவாசையும் சதுரகிரிமலைக்கு நான் போவதுண்டு. எம்பெருமான் காகமுனிவர் தலையாட்டிச் சித்தர் உருவாக்கிய சாதுக்கள் திருக்கூட்டம் இம்மலையில் அன்று கூடும்.

தொடரும்

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

# சிரிய மனிதப் பேரவலத்திற்கு தீர்வு கிட்டுமா?



சிரியாவின் மனிதப் பேரவலம் உலக யுத்தமாக வெடிக்கக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது. சிரியாவின் மீது யுத்தத்தைத் தொடுக்கும் முனைப்புக்களில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது.

அமெரிக்கா சிரியா மீது தாக்குதல் நடத்தினால் உலக அளவில் அது பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடுமென ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.சிரிய ஜனாதிபதி பசர் அல் அசாட்டின் அரசாங்கம் அண்மையில் இரசாயன ஆயுதத் தாக்குதலை நடத்தியதாக அமெரிக்கா உத்தியோகபூர்வமாக குற்றம் சுமத்தியுள்ளது.

சிரியாவில் இரசாயன ஆயுதத் தாக்குதல் தொடர்பில் அண்மையில் அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.இந்த விசாரணைகளின் இறுதி அறிக்கை இன்றைய தினம் வெளியிடப்பட்டிருந்தது.

இதில் ஜனாதிபதி அசாட்டின் படையினர் நடத்திய இரசாயன ஆயுதத் தாக்குதலில் 1429 பேர் கொல்லப்பட்டதாக அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.கடந்த 21 ஆம் திகதி டமாஸ்கசில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றிருந்தது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் 426 சிறுவர் சிறுமியர் கொல்லப்பட்டனர். மூன்று நாட்களுக்கு முன்னதாகவே இந்தத் தாக்குதல் திட்டமிடப்பட்டிருந்தது என அவர் குறிப்பிட்டுள்ளார்.இரசாயன ஆயுதங்களின் மூலம் அரசாங்கக் கட்டுப்பாட்டு பிரதேசத்திலிருந்து கிளர்ச்சியாளர்கள் பகுதிக்கு தாக்குதல் நடத்தப்பட்டது என அவர் தெரிவித்துள்ளார்.

சிரிய அரசாங்கத்தின் இரசாயன ஆயுதப் பயன்பாட்டை தடுக்க உலக நாடுகள் அணி திரள வேண்டுமென வலியுறுத்தியுள்ளார். சர்வதேச ரீதியான ஒத்துழைப்புடன் சிரியா மீது தாக்குதல் நடத்துவதில் அமெரிக்கா கூடுதல் சிரத்தை எடுத்து வருகின்றது.

இரசாயன ஆயுதத் தாக்குதலுக்கு எதிராக உலக நாடுகளை அணி திரட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக அமெரிக்க பாதுகாப்புச் செயலர் சக் ஹேகல் தெரிவித்துள்ளார். சிரியாவிற்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுப்பது தொடர்பில் பிரித்தானியா பாராளுமன்றில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தது.

இராணுவத் தாக்குதல்களில் பிரித்தானிய படைவீரர்களை ஈடுபடுத்த வேண்டுமென பிரதமர் டேவிட் கமரூன் யோசனை முன்வைத்திருந்தார்.எனினும் இந்த யோசனை 13 மேலதிக வாக்குகளினால் தோல்வியைத் தழுவியது.

ஜேர்மனியும் இராணுவ நடவடிக்கைகளில் பங்கேற்கப்போவதில்லை என அறிவித்துள்ளது. ஷஐக்கிய நாடுகள் அமைப்பு இந்த விடயத்தில் காத்திரமான தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டுமென ஜேர்மனி சுட்டிக்காட்டியுள்ளது. அமெரிக்காவின் முக்கிய கூட்டணி நாடுகளான ஜேர்மனியும் பிரித்தானியாவும் சிரியாவுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் தொடர்பில் பின்பற்றிய அணுகுமுறை அமெரிக்காவை அதிருப்தி அடையச் செய்துள்ளது.

குறிப்பாக பிரித்தானிய பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அமெரிக்காவுடனான உறவுகளில் கூட விரிசலை ஏற்படுத்தக் கூடுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இராணுவ நடவடிக்கைகளுக்கு பிரித்தானியாவின் ஆதரவினை திரட்டும் முனைப்புக்களை கைவிடப்போவதில்லை என அமெரிக்கா மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

இரசாயன ஆயுதப் பயன்பாடு குறித்த சர்வதேச நியதிகளை மீறிச் செயற்படுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியது மிகவும் அவசியமானது என அமெரிக்கா தெரிவித்துள்ளது. தனித்து இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதா அல்லது கூட்டணி சேர்வதா என்பது இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க முடியாமை வருத்தமளிப்பதாகவும் பாராளுமன்றில் தீர்மானத்திற்கு மதிப்பளிக்க வேண்டியதன் அவசியத்தை அமெரிக்கா ஜனாதிபதி ஒபாமாவும் நாட்டு மக்களும் புரிந்துகொள்வார்கள் என பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சிரியாவில் இடம்பெற்ற தற்றச்செயல்களுக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டுமென பிரான்ஸ் தெரிவித்துள்ளது. இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தியோர் தண்டிக்கப்பட வேண்டியவர்கள என பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்கோஸ் ஹொலண்டே தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையினால் காத்திரமான தீர்வு எட்ட முடியாது விட்டால் விரிவான கூட்டணி ஒன்றை உருவாக்கி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். சிரிய விவகாரம் குறித்து எதிர்வரும் புதன்கிழமை பிரான்ஸ் பாராளுமன்றில் அவசர விவாதமொன்று நடத்தப்பட உள்ளது.

இதேவேளை சிரியாவில் இரசாயன ஆயுதப் பயன்பாடு குறித்து ஆராயச் சென்ற ஐக்கிய நாடுகள் பிரதிநிதிகள் குழு பணிகளை முடித்துக்கொண்டுள்ளது. தாக்குதல் இடம் பெற்றதாகக் கூறப்படும் பகுதிகளில் விசாரணை நடத்தப்பட்டதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஆயுதக் கண்காணிப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இரசாயன ஆயுதத் தாக்குதல் குறித்த குற்றச்சாட்டுக்கள் குறித்து இந்தக் குழு ஐக்கிய நாடுகள் பொதுச் செயலர் பான்கீ மூனுக்கு விளக்கமளிக்க உள்ளது. இதே வேளை வட சிரியாவில் இரசாயன ஆயுத தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலில் ஏழு பேர் கொல்லப்பட்டுள்ளனர். பாடசாலை ஒன்றின் மீது இந்தத்தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.சிரியாமீது இராணுவத் தாக்குதல் நடத்தப்படுவதற்கு ரஷ்யா எதிரப்பை வெளியிட்டுள்ளது. நாட்டின் உள்விவகாரப் பிரச்சினைகளில் தலையீடு செய்வது ஏற்புடையதல்ல என ரஷ்யா தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையில் சிரியாவிற்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றினால் அதற்கு எதிராக வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தப்போவதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

சீனாவும் இதே நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. இராணுவ நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என சீனாவும் அறிவித்துள்ளது. இதேவேளை வெளிநாட்டுப் படையினரின் தாக்குதல்களுக்கு அஞ்சப் போவதில்லை என சிரிய ஜனாதிபதி பசர் அல் அசாட் தெரிவித்துள்ளார்.

இணையம்

# ஊடகங்களின் முறைப்பாடுகள் குறித்து விரிவான விசாரணைகளை நடத்துக

## ஊடக அமைச்சருக்கு ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

**ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவ நீதம்பிள்ளையுடன் இலங்கை வந்திருந்த ஐ.நா உயர் அதிகாரிகள் குழுவைச் சந்தித்த தனியார் தமிழ் ஊடகங்களைச் சேர்ந்த சிரேஷ்ட ஊடகவிய லாளர்கள் சிலர் அவர்களிடம் தெரி வித்துள்ள முறைப்பாடுகள் தொடர்பாக விரி வான விசாரணைகளை நடத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தகவல்துறை அமைச்சர் கெஹலியவுக்கு பணிப்புரை விடுத்துள் ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.**

குறிப்பாக திருகோணமலையில் அண்மையில் பிராந்திய ஊடகவிய லாளர் ஒருவர் பொலிஸாரால் துன் புறுத்தப்பட்டதாக பத்திரிகை ஆசிரி யர் ஒருவர் நவநீதம்பிள்ளையுடன் வந்திருந்த உயரதிகாரிகளிடம் தெரி வித்தமை தொடர்பாக உரிய விசா ரணை நடத்தி அத்தகைய ஒரு சம் பவம் திருமலையில் நடைபெற்றதா எனவும் அதன் பின்னணிக்கான காரணம் என்ன என்பது தொடர் பான உண்மைத் தன்மையை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக் குமாறும் ஜனாதிபதி உத்தரவிட்டுள் ளார்.

அத்துடன் உள்நாட்டில் இடம் பெறும் இது போன்ற சிறு சிறு சம்ப வங்களை ஊடக அமைச் சரிடமோ அல்லது தனது கவனத்துக்கோ கொண்டு வராதிருந்த இந்தச் சிரேஷ்ட தமிழ் ஊடகவியலாளர் களில் ஒரு சிலர் அதனைப் பெரி தாக்கி நவநீதம்பிள்ளை குழுவிடம் முறையிட்டுள்ளமை குறித்தும் ஜனா திபதி தனது அதிருப்தியைத் தெரி வித்தார்.

மாதமொருமுறை தான் ஊடக நிறுவனங்களின் பிரதானிகள் பத் திரிகைகளின் பிரதம ஆசிரியர்களைச் சந்திக்கும் போது கூட தெரிவிக்கப் படாத இதுபோன்ற சிறு சம்பவ நிகழ் வுகள் நவநீதம்பிள்ளையின் கவ னத்திற்குக் கொண்டுவரப்பட்டு முறையிடப்பட்டமை வருந்தத் தக்க தொரு விடயம் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தன்னை இவர்கள் சந்திக்கும் வேளைகளில் தனிப்பட்ட முறை யில் கூட பல விடயங்கள் கலந்துரை யாடப்படுவதுண்டு.அவ்வேளைகளில் இவர்கள் இது போன்ற விடயங் களைச் சுட்டிக் காட்டியிருந்தால் அவ்விடத்திலேயே அதற்குத் தீர்வு காணப்படும் சூழல் ஏற்பட்டிருக்கும்.

ஆனால் இதனைப் பெரிதாக்கி நவநீதம் பிள்ளை குழுவிடம் முறை யிடும் அளவுக்கு தமிழ் பத்திரிகை ஆசிரியர்கள் ஒரு சிலர் முயற்சித் தமை குறித்து ஜனாதிபதி தனது கவலையை யும் அதிருப்தியையும் வெளியிட்டுள்ளார்.

எது எவ்வாறாயினும் குறித்த பத்திரிகை ஆசிரியரினால் முறை யிடப்பட்ட சம்பவம் தொடர்பான உண்மைத் தன்மையை ஆராய் ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

எமது நாட்டின் மீது வேண்டு மென்றே பொய்யான குற்றச்சாட் டுக்களை உருவாக்கி நாட்டுக்கு அப கீர்த்தி ஏற்படுத்த சில சக்திகள் முயன்று வரும் இவ் வேளையில் பொறுப் புள்ள ஊடகவியலாளர்கள் ஒரு சிலர் இவ் வாறு பொறுப்பற்ற முறையில் நடந்து கொள் வது நாட் டுக்கு ஆரோக்கியமானதல்ல என வும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.(அ-2)

# எந்தவொரு வேட்பாளருக்கும் விசேட பாதுகாப்பு கிடையாது

## சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளர்

(கொழும்பு)

பொலிஸ் நிலையங்களின் புலனாய்வுத் தகவல் பிரிவு விஸ்தரிக் கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சகல விதமான குற்றவாளிக ளையும் கைது செய்யக்கூடிய வகையில், அனைத்து பொலிஸ் நிலையங் களினதும் புலனாய்வு தகவல் பிரிவு விஸ்தரிக்கப்படவுள்ளது.

ஏற்கனவே, இது தொடர்பிலான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் நந்த மல்லவா ராச்சி தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பொலிஸா ருக்கும் மக்களுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உரிய காலத்தில் பதவி உயர்வுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.


மக்களுடன் சரியான முறையில் தொடர்புகளைப் பேணுவதன் மூலம் குற்றவாளிகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இதேவேளை வட மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவருக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு ஆளும் கட்சி அமைச்சர் ஒருவர் கோரியுள்ளார்.

எனினும் இவ்வாறு வேட்பாளர்களுக்கு விசேட சலுகைகளை வழங்க முடியாது.ஒரு வேட்பாளருக்கு மட்டும் எப்படி விசேட பாதுகாப்பு வழங் கப்பட முடியும்.

அவ்வாறு செய்தால் ஏனையவர்களுக்கும் விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்க நேரிடும். எனவே , இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது என அமைச்சரிடம் மல்லவாராச்சி தெரிவித்தார். (அ-2)

# சர்வதேச சதுரங்க போட்டியில் யாழை சேர்ந்தவர் தெரிவு



(யாழ்ப்பாணம்)

இலங்கையில் நடைபெற்ற சர் வதேச சதுரங்க போட்டிகளின் 6 ஆவது தொடரில் யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த வடமாகாண ஆளுநர் செயலக அலுவலர் வித்தியாரணி சிவகுருநாதன் பெண்கள் பிரிவில் வெற்றியாளராக தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

கொழும்பு பொதுநூலகத்தில் கடந்த மாதம் 17 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதிவரை நடைபெற்ற இச்சதுரங்க போட்டிகளில் யாழ். மாவட்டத்தை சேர்ந்த யா/பரியோ வான் கல்லூரி மாணவர்களான ஜீவா னந்தம் ஓம்சியாம் சங்கர், தர்மச் சந்திரன் பிரம்மன் மற்றும் மேற்படி வெற்றியாளர் வித்தியாரணி சிவ குருநாதன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இப்போட்டிகளில் ஆண்கள் பிரி வில் ஜி.சி. அனிருத்த, பெண்கள் பிரிவில் வித்தியாரணி சிவகுருநா தன் ஆகியோர் வெற்றியாளர்களாக தெரிவுசெய்யப்பட்டனர். (அ-5)

# நாட்டின் பல பாகங்களிலும் போலி நாணயத்தாள்கள்

## பொலிஸார் எச்சரிக்கை

நாட்டின் பல இடங்களில் போலி நாணயத்தாள்கள் புழக்கத்தில் இரு ப்பதால் பணத்தை பரிமாற்றம் செய் தல் மற்றும் பயன்படுத்தலின் போது அவதானமாக இருக்குமாறு பொலி ஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

போலி நாணயத்தாள்கள் கண னியில் அச்சிடப்படுவதால் அவற்றை தடவி பார்க்கும் போதும் கசக்கும் போதும் அந்த நாணயத்தாள்கள் போலியானவையா அல்லது அச லானவையா என்பதை அறிந்து கொள்ள முடியும் என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளிலும். தென்பகுதிகளிலும் போலி நாணயத்தாள்கள் புழக்கத் திலுள்ளன.

கடந்த 29 ஆம் திகதி கல்முனை பிரதேசத்தில் 14 ஆயிரம் ரூபா நாண யத்தாள்களுடன் மூன்று பேர் கைது செய்யப்பட்டனர்.

மன்னார், வவுனியா மற்றும் களுத் துறை பிரதேசங்களிலும் இவ்வாறு நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட் டன.

இவை தவிர நல்லூர் கந்த சுவாமி ஆலயம், மடு தேவாலயம், முன் னேஸ்வரம் ஆலயம் மற்றும் சிலா பம் தலவில தேவாலயம் ஆகிய வற்றின் வருடாந்த உற்சவங்களின் போதும் போலி நாணயத்தாள்கள் பழக்கத்தில் விடக்கூடிய சாத்தியம் இருப்பதாக பொலிஸார் தெரிவித் தனர். (அ-2)


# கிளி. மகா வித்தியாலய அணி முதலாம் சுற்றுக்கு தெரிவாகியது

(கிளிநொச்சி)

பரபரப்பான கிரிக்கெட் போட்டி யில் அநுராதபுரம் நிவத்த கச்சிதிய மகாவித்தியாலய அணியை வெற்றி கொண்ட கிளிநொச்சி மகாவித்தி யாலய அணி பிரிவு மூன்றின் முத லாம் சுற்றுக்கு முன்னேறியது.

பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத் தால் நடத்தப்பட்டு வரும் 15 வயதுப் பிரிவினருக்கான 50 பந்து பரி மாற்றங்களைக் கொண்ட இப் போட் டியில் தனது மூன்றாம் சுற்றில் கிளி/ இந்துக் கல்லூரி, கிளி/ மத்திய கல்லூரி அணிகளை வெற்றி பெற்ற கிளி. ம.வி .அணி கடந்த 21 ஆம் திகதி தனது இரண்டாவது சுற் றில் அநுராதபுரம் அணியை அதன் சொந்த மண்ணில் எதிர் கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அநுராதபுரம் நிவத்தகச்சிதிய மகா வித்தியாலய அணி 35.5 பந்து பரிமாற்றங்களில் கிளி/ ம.வி வீரர்க ளின் சிறப்பான பந்து பரிமாற்றங்க ளிலும் மற்றும் களத்தடுப்பு காரண மாக சகல இலக்குகளையம் இழ ந்து 120 ஓட்டங்களைப் பெற்றது.



அநுராதபுரம் நி.க. மகாவித்தி யாலயம் சார்பாக லக்சித 32, சனிடு 15, மலீசா 11 என ஓட்டங்களை அதிக மாகப் பெற்றனர். பந்துவீச்சில் கிளி. ம.வி சார்பாக சிறப்பாக பந்துவீசிய புருசோத்மன் 4, கஜீபன் 2, துசாந் தன் 2, மிதுஷன் 1 என இலக்கு களை வீழ்த்தினர்.


பதிலுக்கு 121 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத் தாடிய கிளி.ம.வி. அணி 37.3 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 121 ஓட்டங்களைப் பெற்று ஒரு இலக்கால் வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் கிளி.ம.வி சார் பாக டிலக்சன் 18 ஓட்டங்களையும், அநுராதபுரத்தின் துல்லியமான பந்து வீச்சுக்குமத்தியில்சுபீட்சன் ஆட்டமிழக் காது 26 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.பந்துவீச்சில் அநுராத புர நி.க.ம.வி சஜிந்த 2, டுல்சான் 2, துஷான் 3, இரான் 2 என இலக்கு களை வீழ்த்தினர். அநுராதபுரத்தின் முதல் நிலை அணியை வென்று கிளி.ம.வி. அணி முதலாம் சுற்றுக்கு தகுதிபெற்றது. (அ)

# கச்சதீவு தொடர்பான இந்திய அரசின் வாதத்திற்கு ராமதாஸ் கண்டனம்

(கொழும்பு)

**கச்சதீவை மீட்கக் கோரும் வழக்கில், உச்ச நீதிமன்றத்தில் பதில் மனு தாக்கல் செய்துள்ள இந்திய மத்திய அரசு, கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது என்றும், அதை மீட்கமுடியாது என்றும் கூறியிருப்பதை தான் வன்மையாக கண்டிப்பதாக பா.ம.க. நிறுவுனர் மருத்துவர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

1966 ஆம் ஆண்டில் இலங்கை அமைச்சரவை செயலாளர் பி.பி. பீரிஸ் வெளியிட்ட அறிக்கையில்,

"கச்சதீவில் இலங்கைக்கு எந்த உரிமையும் இல்லை. அது இராம நாதபுரம் மன்னருக்கு சொந்தமானது என்று விக்டோரியா அரசி காலத்திலேயே ஆங்கிலேய அரசு அதிகார பூர்வ அறிக்கையை வெளியிட்டிருக்கிறது" என்று கூறியுள்ளார்.

இவ்வாறு இராமநாதபுரம் சமஸ்தானத்தின் ஓர் அங்கமாக இருந்த கச்சதீவை 1974 ஆம் ஆண்டில் இலங்கைக்கு மத்திய அரசு தாரை வார்த்ததையும் அதன்பின் அங்கு இந்திய மீனவர்களுக்கு மீன் பிடிக்கும் உரிமை பறிக்கப்பட்டதையும் தமிழக மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவில்லை.

அவர்கள் இது விடயம் தொடர்பில் கடந்த 40 ஆண்டுகளாக குரல் கொடுத்து வருகிறார்கள். உண்மை இவ்வாறு இருக்க கச்சதீவு இலங்கைக்கு சொந்தமான பகுதி என்று கூறுவது முழுப் பொய் ஆகும்.

கச்சதீவு தாரைவார்க்கப்பட்டதற்கு பின்னர் 600 இற்கும் அதிகமான மீனவர்களை இலங்கை கடற்படையினர் சுட்டுக்கொன்றிருக்கின்றனர், ஆயிரக்கணக்கான மீனவர்கள் தாக்கப்பட்டிருக்கின்றனர், இலட்சக் கணக்கான மீனவர்கள் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர், கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள மீனவர்களின் உடைமைகளை கடற்படையினர் அழித்துமுள்ளனர்.

இதனால் அதை மீட்க வேண்டும் என்ற குரல் தமிழகத்தில் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருக்கிறது.

ஆனால், அண்மையில் டில்லி வந்து பிரதமரைச் சந்தித்த இலங்கை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது என்றும் அதை திரும்பத்தருவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் மார்தட்டி கூறியுள்ளார்.

இதனால் தான் மத்திய அரசு தமிழக மக்களின் உணர்வுகளை சிறிதும் மதிக்காது இலங்கை அமைச்சரின் குரலாக மாறி கச்சதீவை மீட்க முடியாது என்று கூறியிருக்கிறது.

இலங்கை தொடர்பான எந்த சிக்கலாக இருந்தாலும் அவற்றிலெல்லாம் தமிழகத்தின் நலனை கைவிட்டு விட்டு இலங்கை அரசுக்கு ஆதரவு வழங்குவதே மத்திய அரசின் வழங்கமாகவுள்ளது. இது தமிழகத்திற்கு இழைக்கப்படும் மிகப் பெரிய துரோகம் ஆகும்.

இந்திய அரசியல் சட்டத்தின் படி நாட்டின் எந்தவொரு பகுதியையும் அண்டை நாடுகளுக்கு தாரைவார்க்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு கிடையாது. நாடாளுமன்றத்திற்கு மட்டுமே அந்த அதிகாரம் உண்டு.

கச்சதீவு தொடர்பான ஒப்பந்தத்திற்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெறப்படவில்லை. இந்த ஒரு காரணத்தை வைத்தே 1974 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை இரத்து செய்து கச்சதீவை மீட்கமுடியும். ஆனால், அதை செய்ய மத்திய அரசு தயாராக இல்லை.

மேலும் 1987 ஆம் ஆண்டு இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை சிறிதும் மதிக்காது கொழும்பு உச்ச நீதிமன்றத்தின் துணையுடன், வடக்கு-கிழக்கு மாநிலங்களின் இணைப்பு செல்லாது என்று இலங்கை அரசு அறிவித்தது.

சட்டத்தை மீறுவதில் இலங்கை அரசுக்கு உள்ள துணிச்சல் கூட அரசியல் சட்டத்தை பாதுகாப்பதில் இந்திய அரசுக்கு இல்லாது போனமை வேதனை அளிப்பதாகவுள்ளது.

எனவே, இந்தப் பிரச்சினையில் மத்திய அரசு தன் அணுகுமுறையை மாற்றுவதற்கு தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றுபட்டு அழுத்தம் கொடுக்க வேண்டும் என அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.(அ-2)




* 1752- ஐக்கிய இராச்சியத்தில் கிரிகோரியன் நாட்காட்டி அறிமுகப்படுத்தப்பட்டது.
* 1792 - பிரெஞ்சுப் புரட்சியின் போது இடம்பெற்ற கலவரங்களில் மூன்று ரோமன் கத்தோலிக்க ஆயர்கள் உட்பட இருநூறிற்கும் அதிகமான குருமார்கள் உயிரிழந்துள்ளனர்.
* 1870 - பிரான்சில் செடான் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் பிரஷ்யப் படையினர் பிரான்சின் மன்னனான மூன்றாம் நெப்போலியனையும் அவனது படையினர் ஒரு இலட்சம் பேரையும் கைது செய்தனர்.
* 1898 - பிரித்தானிய மற்றும் எகிப்திய படைகள் சூடானிய பழங்குடியினரைத் தாக்கி அந்நாட்டில் பிரித்தானிய மேலாண்மையை ஏற்படுத்தின.
* 1945 - இரண்டாம் உலகப் போர்: பசுபிக் போர் முடிவுக்கு வந்தது. ஜப்பானின் கடைசி அதிகாரபூர்வமான சரணடைதல் டோக்கியோ வளைகுடாவில் "மிசூரி" என்ற அமெரிக்கக் கப்பலில் நிகழ்ந்தது.
* 1945 - வியட்நாம், பிரான்சிடம் இருந்து விடுதலையை அறிவித்து, வியட்நாம் மக்களாட்சிக் குடியரசு என்ற பெயரில் (வடக்கு வியட்நாம்) ஹோ சி மின் தலைமையில் ஆட்சியை அமைத்தது.
* 1951 - எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா இலங்கை சுதந்திரக் கட்சியை உருவாக்கினார்.
* 1958 - அமெரிக்காவின் விமானப்படை விமானம் ஒன்று சோவியத் ஆர்மீனியாவில் சுட்டு வீழ்த்தப்பட்டது.
* 1965 - பாகிஸ்தான் படையினர் இந்தியாவின் காஷ்மீருக்குள் நுழைந்தனர்.
* 1969 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது தன்னியக்கப் பணம் வழங்கி நியூயோர்க்கில் அமைக்கப்பட்டது.
* 1970 - சந்திரனுக்கான அப்பல்லோ 15 விண்கப்பலின் திட்டம் கைவிடப்பட்டதாக நாசா அறிவித்தது.
* 1990 - மாலடோவாவின் ஒரு பகுதியான திரான்ஸ்னிஸ்திரியா தன்னிச்சையாக வெளியேறி தன்னை சோவியத்தின் ஒரு குடியரசாக அறிவித்தது. ஆனாலும் இதனை சோவியத் ஜனாதிபதி மிக்கைல் கொர்பசோவ் ஏற்கவில்லை. இன்று வரையில் இது எந்த நாட்டினாலும் அங்கீகரிக்கப் படவில்லை.
* 1996 - பிலிப்பைன்ஸ் அரசுக்கும் மோரோ தேசிய விடுதலை முன்னணிக்கும் இடையில் அமைதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

**பிறப்பு**

* 1913 - **இஸ்ரேல் கெல்ஃபாண்ட், சோவியத் கணிதவியலர் (இ. 2009)**

**இறப்புகள்**

* 1969- ஹோ சி மின், வியட்நாம் தலைவர் (பி.1890)
* 1973 - ஜே. ஆர். ஆர். டோல்கியென், பிரித்தானிய எழுத்தாளர் (பி. 1892)

### இஸ்ரேல் கெல்ஃபாண்ட்



இஸ்ரேல் கெல்ஃபாண்ட் 1913 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி உருசியாவில் பிறந்தார். சோவியத் மற்றும் அமெரிக்கக் கணிதவியலர். கணிதத்தில் குலக் கோட்பாடு, ஒப்புநிறுத்துக் கோட்பாடு, நேரியல் இயற்கணிதம் ஆகியவற்றில் ஆழமாகப் பங்களித்த அறிஞர். இவர் சோவியத் ஒன்றியத்தின் உயர் பெருமையாகிய லெனின் புகழ்வரிசைப் பதக்கமும், கணிதத்துறையின் வுல்ஃவ் பரிசையும் (Wolf Prize) பெற்றார். லண்டனின் ராயல் சொசைட்டி அரச குமுக சிறப்பாளராகவும் தெரிவு செய்யப்பெற்றார். எம்.ஐ.டியிலும், ஆர்வர்டு பல்கலைக்கழகத்திலும் பணியாற்றிய பின்னர் நியூ செர்சியில் உள்ள ரட்கர்சு பல்கலைக்கழகத்தில் சிறப்பு மிக்கப் பேராசிரியராகப் (Distinguished Professor) பணி ஏற்றார்.

தொகை வடிவவியல் (integral geometry) என்னும் துறையில் இவர் ஆற்றிய ஆய்வுகளும் அதன் முடிவுகளும் இன்று மருத்துவத்தில் உடல் உள்ளுறுப்புகளை நுண்படம் எடுக்கும் அணுக்காந்த ஒத்ததிர்வு படக் கலையிலும் (Magnetic Resonance Imaging> MRI), கணிவழி குறுக்குவெட்டு புதிர்க்கதிர்ப் படம் (CAT) எடுத்தல் முதலியவற்றிலும் பெரிதும் பயன்படுகின்றன. 2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி இவர் உயிரிநீத்தார்.

## இறுதிக்கட்டப் போரில் 40 ஆயிரம் மக்கள் காணாமற் போகவில்லை

### குற்றச்சாட்டை நிராகரிக்கிறார் கோத்தா

(கொழும்பு)

வடபகுதியில் படையினரால் அதிகளவிலான மக்கள் காணாமற் போயியுள்ளதாக குற்றம் சுமத்தப்படுமாயின், காணாமற் போனவர்கள் எனக் கூறப்படும் நபர்களின் பெயர் விபரங்களை முன்வைக்குமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையை நேற்றுமுன்தினம் அவர் சந்தித்த போதே இக் கோரிக்கையை முன்வைத்தார்.

அத்துடன் சில அமைப்புகள் கூறுவது போன்று வடக்கில் இறுதிக்கட்ட போரின் போது 40 ஆயிரம் பேர் காணாமற் போயுள்ளதாக தெரிவிக்கப்படுவதை தான் நிராகரிப்பதாகவும் கோத்தபாய கூறியுள்ளார்.

அரசாங்கம், யூனிசெவ், செஞ்சிலுவைச் சங்கம் போன்ற பல அமைப்புகள் நடத்திய எந்த விசாரணைகளிலும் இந்த தகவல் தெரியவரவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் இலங்கையின் இறுதிக்கட்ட போரின் போது 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதாக சர்வதேச அமைப்புகள் குற்றம் சுமத்தியிருந்தன.

இதற்கான சாட்சியங்களை அந்த அமைப்புகள் வெளியிட்டிருந்ததுடன் பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி தனது இரண்டு விவரணப்படங்கள் மூலம் அதனை உறுதிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(அ-2)

# நல்லூர் ஆலய சூழலில்...

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத்தின் ப்ரம்மகான சபா நடத்தும் தெய்வீக இசைச் சங்கமம் நிகழ்வு மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீன புதிய மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இதன்படி இன்று கொழும்பு மிருதங்க வித்துவான் அ.கணேசசர்மாவின் புதல்வர் மிருதங்க கலாகீர்த்தி பூபதி பிரம்மஸ்ரீ க.சுவாமிநாத சர்மா குழுவினரின் இசைக்கச்சேரி இடம்பெறும்.

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதா வாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மா வழங்கும் பாரதவம்சம் பற்றிய இசைப் பேருரை இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் இன்று பீஷ்மர் யுத்தம் என்னும் விடயப் பொருளிலான இசைப் பேருரை இடம்பெறவுள்ளது.

நல்லூர் கந்தன் மஹோற்சவத் தை முன்னிட்டு மாலை 7.15 மணி தொடக்கம் 7.45 மணிவரையும் யாழ்.சின்மயா மிஷன் ஆச்சிரம வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் சொற்பொழிவு ஆற்றி வருகின்றார். இந்நிகழ்வில் இன்று இதிகாசங்கள் புராணங்கள் என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.


நல்லூர் முருகன் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு மாலை 6.45 முதல் இரவு 8.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய இன்று திங்கட்கிழமை திருமதி குணபூஷணம் நாகராசா வழங்கும் இசையரங்கு இடம்பெறும். இந் நிகழ்வில் அணிசெய் கலைஞர்களாக வயலின் எ.ஜெயராமன், மிருதங்கம் எம்.சிதம்பரம்நாதன், முகர்சிங் என்.சதீஸ்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக சிந்தனை, சமயச் சொற்பொழிவு, கலை நிகழ்வுகள் என்பன உற்சவகாலத்தில் தினமும் பிற்பகல் 3 மணிமுதல் 6 மணிவரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்றைய நிகழ்வுகளாக காலை இளம் சைவப் புலவர் திருமதி சரோஜினிதேவி சிவஞானம் வழங்கும் வரதா முருகா மயில் வாகனனே என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவு இடம்பெறும். மாலை சைவப்புலவர் க.கைலைநாதன் வழங்கும் உதித்தனன் உலகம் உய்ய என்னும் விடயப்பொருளிலான சொற்பொழிவு இடம் பெறும். தொடர்ந்து சுழிபுரம் கார்த்திகேசு ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலை, கோப்பாய் சித்திரவேலாயுதர் கோவில் அறநெறிப் பாடசாலை ,கரவெட்டி உச்சில் புவனேஸ்வரி அம்பாள் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்கள் வழங்கும் கலைநிகழ்வுகளும் இடம்பெறும். விசேட நிகழ்வாக தவராசா கவாஸ்கர் வழங்கும் இன்னிசைக் கச்சேரி இடம்பெறும்.

நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு சைவத் தமிழ் பண்பாட்டுக்கழகத்தினால் நடத் தப்படும் தெய்வீகப் பேருரை கலை நிகழ்வு, மாணவர் சொற்பொழிவு, கலைஞர் கௌரவிப்பு நிகழ்வுகள் மஹோற்சவ காலங்களில் தினமும் பிற்பகல் 6.30 மணி முதல் இரவு 8 மணிவரை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் நடைபெறும். இதன்படி இன்று திங்கட்கிழமை மொழியும் வள்ளல் பராரதீஸ் வழங்கும் தமிழும் முருகனும் என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவு இடம்பெறும்.

எம் தாயே முத்துமாரி இறுவெட்டின் பாடல்களை எழுதிய கவிஞர் வேலணையூர் சுரேஸ்க்கு வித்தகக் கவிஞர் என்னும் பட்டமும், இசையமைப்பை வழங்கிய கோ.முரளிக்கு இன்னிசைச் சுரபி என்னும் பட்டமும் அண்மையில் வழங்கி கௌரவிக்கப்பட்ட போது...

# கச்சதீவை மீட்க கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து போராடும்

## தா.பாண்டியன் சூளுரை

கச்சதீவு இலங்கைக்குச் சொந்த மானது. அதை மீட்க முடியாது என்று இந்திய மத்திய அரசு கூறியிருப்பது தமிழக மீனவர்களுக்கு இழைத்திரு க்கும் பச்சைத் துரோகம் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலர் தா.பாண்டியன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கச்சதீவு மீட்கப்பட வேண்டும் என்று தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசி யல் கட்சிகளும் கோரி வருவதுடன் தமிழ்நாடு சட்டமன்றம் ஏகமனதாக தீர்மானமும் நிறைவேற்றியுள்ளது.

இக்கோரிக்கையை வலியுறுத்தி முதலமைச்சர் ஜெயலலிதாவும் தமிழ் நாடு அரசும் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து தற்போது விசா ரணை நடைபெற்று வருகின்றது.

மத்திய அரசின் சார்பில் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தில் கச்ச தீவு கேட்பாரற்று இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் இருந்ததாகவும் அதன் காரணமாக இலங்கை நாட்டிற்கு அத்தீவு சொந்தமாகி விட்டது என்றும் கூறியுள்ளது.

இது கடும் கண்டனத்திற்குரியதா கும். இலங்கைக்கு கச்சதீவு சொந்த மென்றால் இரு நாடுகளும் 1974 இல் ஒப்பந்தம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது ஏன்?

தமிழக மீனவர்கள் தொடர்ந்தும் இலங்கைக் கடற்படையினரால் தாக்க ப்படுவதும் வலைகள் அறுக்கப்படுவதும் மீன்களை பறிமுதல் செய்வதும் படகு களை உடைப்பதும் பறிமுதல் செய்து எடுத்துச் செல்வதும் மீனவர்களை கைது செய்து சிறையில் அடைப் பதும் சுட்டுக்கொல்வதும் போன்ற வன்முறைகளை மேற்கொண்டு வரும் இலங்கை அரசின் நடவடிக் கைகளுக்கு மத்திய அரசு முழு ஆதரவு வழங்கியுள்ளது.

கச்சதீவு விவகாரத்தில் தமிழக மீனவர்களுக்கு பச்சைத் துரோகம் செய்திட்ட மத்திய அரசின் நயவஞ்சக செயலை வன்மையாக கண்டிப் பதுடன் கச்சதீவை மீட்க தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும் முயற்சிக ளுக்கு தமிழக அனைத்துப் பகுதி மக்களும் ஆதரவளிக்க முன்வர வேண்டுகிறோம்.

நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு போராடுவதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிப்பதுடன் நாடாளுமன்றத் திலும் மக்கள் மன்றத்திலும் போரா டுவோம் என்பதை தெரிவித்துக் கொள் கிறேன் எனக் கூறியுள்ளார். (அ-2)

# நல்லூரான் திருவடிக்கு ஒருமுகத் திருவிழா



## நின்னருள் இன்றியார்கதி?



எனக்குள்ளே நின்று எனைறியாமல் நீ
நண்ணுறு பொருளெலாம் நல்கி
வினைப்பயன் சேர தெளிவு கூறிய நீ
விட்டிடா தாண்டருள் கொடுத்து
நினைப்பது தகுதி கணக்கெலாம் தெரிந்தோய்
நின்னருள் இன்றியார் கதியோ
தனமெலாம் எனது அகம்புகச் செய்வாய்
நல்லூரில் உறையும் வேலவனே

கவிமணி கந்த முருகேசதாசனார்.

## நல்லூரானே நாதியற்று தவிக்கின்றேன்



கூடிழந்து தவிக்கின்ற குருவியானேன்
குவலயத்தில் யாருமற்ற பித்தனானேன்
நீரிழந்து வாடுகின்ற மரமுமானேன்
நீரில் தினமமுகின்ற மீனுமானேன்
கருநீலக் கடலிலாடும் படகுமானேன்
கருடன் கால் அகப்பட்ட சர்ப்பமானேன்
நாதியற்று தவிக்கிறேன் நான்·நல்லூரானே
நானிருப்பேன் என்று வுந்து ரட்சிப்பாயே

வேலணையூர், பா.சசிகுமார்

## பகைவர்க்கும் அருள்கின்ற வேல்



அழகிற்கும் முருகென்று பேர் – அந்த
முருகென்ற சொல் எங்கள்
குகனுக்குப் பேர்
குகனுக்குப் பேர்

கருணைக்கு முருகன் தான் பேர் – நல்ல
வரம் அள்ளித் தருகின்ற
வேல் கந்தன் வேல்
வேல் கந்தன் வேல்

இறைவர்க்கு மகன் கந்தவேள் – அந்த
பரமர்க்கும் குரு இந்த
எழில் கந்த வேள்
எழில் கந்த வேள்

பகைவர்க்கும் அருள்கின்ற வேல் – கொடும்
சூரனே மயிலாக
அமர்ந்திட்ட வேல்
அமர்ந்திட்ட வேல்

பிறை கொண்ட ஈசற்கும் சேய் – நல்ல
மறை கண்ட தமிழுக்கும்
தமிழர்க்கும் தாய்!
தமிழர்க்கும் தாய்!

நி.ஆதித்தன், கொக்குவில்.

## வரம்தரும் நல்லைநகர் கந்தவேளே



திக்கெட்டும் ஒன்றாய் திரண்டேத்த
திருவீதி உலாவி அருள்புரிந்து
பக்தர் மனமுருகி பாடிட்வே
பாரார் பார்த்து மனம் நெகிழ
நெக்கி விம்மி நெஞ்சார
நல்லூரா போற்றி போற்றியென்று
சொக்கி செந்தமிழ் மாலைசூட
வரம்தரும் நல்லைநகர் கந்தவேளே

கலைஞர் பா.பாலச்சந்திரன், சுன்னாகம்.


## நல்லூர் கந்தன் அநுபூதி



ஆறுஞ் சடைசேர் ஐயன் விழியில்
ஆறும் பொறியே யாயுதித் தவனே
கூறும் வினையும் குறையு மகலத்
தேறும் படி'யாள்' திருநல் லூரா!

கலாபூஷணம், சந்தக் கவிஞர். நவ.பாலகோபால்

# தென்னைப் பயிர்ச்செய்கைக்கான சில தொழில்நுட்ப ஆலோசனைகள்



தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ளமையால் வீட்டுத் தோட்டத்திலும் பெரிய அளவிலான தோட்டங்களிலும் புது நடுகை, மீள், கீழ் நடுகையாகவும் தென்னங்கன்றுகளை நாட்டலாம். எந்த வர்க்கமான தென்னங்கன்றுகளாயினும் சரி தெரிவு செய்யப்பட்ட தாய் மரங்களில் இருந்து பெறப்பட்ட விதை தேங்காய்களை அதற்குரிய தொழில் நுட்ப முறையில் நாற்று மேடை இட்டு பெறலாம். அல்லது சிறந்த தென்னங்கன்றுகளை விநியோகிக்கும் இடங்களில் இருந்தே பெற்று நாடுகை செய்வதும் சாலச் சிறந்தது.

தென்னைகளில் உள்ளூர் இனம் (உயரினம்), கலப்பினம் (DxT), செவ்விளநீர் இனம் என்பவை எமது பிரதேசத்திற்கு பொருத்தமானதாகும். கலப்பின செவ்விளநீர் வர்க்க தென்னங்கன்றுகளை வீட்டிலே மூன்று அல்லது நான்கு கன்றுகளை நாட்டி சிறந்த முறையில் பராமரிப்பதன் மூலம் முறையே 3 1/2, 5 வருடங்களில் விளைவைப் பெற முடியும்.

கலப்பின வர்க்க தென்னங்கன்றுகளை நாட்டும்போது ஈரலிப்பு எந்தநேரமும் இருக்கும் இடமாக தெரிவு செய்து நாட்டுதல் வேண்டும். உயர் வர்க்கத்தை பெரும் தோட்டங்களிலும் அல்லது வீட்டு தோட்டங்களிலும் நாட்டலாம். இவை பலன்தர ஏறக்குறைய 5-6 வருடங்கள் செல்லும்.

**தென்னை நடுகை முறை**

எந்த வர்க்கமான தென்னங்கன்றுகளாயினும் நடுகை முறையில் வேறுபாடில்லை. நடுகை செய்யக் கூடிய காணியை தெரிவு செய்து துப்புரவு ஆக்கி நடுகை குழிகளை தயார் செய்தல் வேண்டும். நடுகை குழியின் அளவு மண்ணுக்கு மண் வேறுபடும்.

தென்னைகளுக்கு இடையில் ஊடு பயிர்ச் செய்கை செய்யும் நோக்கத்துடன் நடுகை மேற்கொள்வதாயின் சதுர முறையில் இரண்டு தென்னங்கன்றுகளுக்கு இடையேயான இடைவெளித் தூரம் 26 அடி X 26 அடி ஆகவும் ஏனைய பிறவாயின் 22 அடி X 22 அடி தூர இடைவெளியிலும் ஏக்கருக்கு முறையே 64, 90 கன்றுகளை நாட்டலாம். மேற்குறிப்பிட்ட அளவுகளில் கூனி, அடித்து நடுகைக் குழியை வெட்டுதல் வேண்டும்.

**நடுகைக் குழி தயாரித்தல்**

நடுகை செய்யப்பட வேண்டிய இடங்களை அடையாளப்படுத்திய பின்னர் கிரவல் மண் உள்ள இடத்தில் 3 அடி X 3 அடி X 3 அடி நீள, அகல, ஆழத்திலும், மணல் மண், இருவாட்டி மண் உள்ள தரையாயின் 2 அடி X 2 அடி X2 அடி நீள, அகல, ஆழத்திலும் நடுகைக் குழிகளை வெட்டுதல் வேண்டும். வெட்டும் போது மேற்படை மண்ணை ஒரு புறமாகவும் கீழ் படை மண்ணை எதிர்ப்புறமாவும் தரையில் போடவும். குழியின் அடியில் நிலக்கறையான்களை கட்டுப்படுத்த கிடைக்கக்கூடிய அளவு அடுப்புச் சாம்பலை இடவும். பின்பு அடியில் 2 படையில் தேங்காய் மட்டைகளை அடுக்கவும். தேங்காய் மட்டையின் அழுத்தமான பக்கம் கீழ்ப்பக்கம் இருக்கத்தக்கவாறு அடுக்கவும்.

மேற்படை மண்ணுடன் பின்வருவனவற்றைக் கலக்கவேண்டும். இரண்டு கூடை மாட்டெரு அல்லது ஒரு கூடை ஆட்டெருவுடன் 5 கிலோ அடுப்புச் சாம்பல், இவை கிடைக்காதுவிடின் அடியுயரமாக 1/2 கிலோ முதல் ஒரு கிலோ அளவில் YPM (Young Palm Mixture) இளக்கலவையை மண்ணுடன் கலத் தல் வேண்டும்.

பசளை கலக்கப்பட்ட மண்ணை மணல் தரையாயின் 1 1/2 அடி ஆழத்திற்கும் கிரவல் தரையாயின் 2 1/2 ஆழத்திற்கும் நிரப்புதல் வேண்டும். இத்தனை செயல் முறைகளுக்கு முன்பு தென்னங்கன்றுகளை நாட்டுதல் கூடாது.

**நடுகைமுறையின் தொழில் நுட்பம்**

நாற்றுகளுடன் கூடிய விதை தேங்காய்களைக் கறையான் தாக்கத்திலிருந்து தடுப்பதற்கு அல்றெக்ஸ் (Aldrex) 25% அல்லது குளோரோடென் (Chorodane) பூச்சி நாசினியில் 10 மில்லி லீற்றரை 10 லீற்றர் தண்ணீரில் கலந்து அக்கலவையுள் அமிழ்த்தி எடுக்கவும். பின்பு நிலமட்டத்திலிருந்து ஒரு அடிக்குக் கீழே நடுகைக் குழியிலுள்ள மண் மட்டத்தில் ஒரு பொழி மண்ணை மண்வெட்டியால் கிடங்கின் நடுவே வெட்டி எடுத்து, அதனுள் தென்னங்கன்றை நேராகவும் விதை தேங்காயின் மேற்பரப்பும் கிடங்கிலுள்ள மண்மட்டமும் சமனாக இருக்கத்தக்கவாறு தண்டுப் பகுதியை மண்ணினுள் தாழ்க்காதும் மண்ணை அணைக்கவும்.

தேங்காயின் மேற்பரப்பும் கிடங்கிலுள்ள மண்மட்டமும் சமனாக இருக்கத்தக்கவாறும் தண்டுப்பகுதியை முற்றாக மண்ணினுள் தாழ்க்காமல் மண்ணை அணைக்க வேண்டும்.

அநேகமான தென்னைச்செய்கையாளர்கள் தண்டுப்பகுதியையும் விதைத் தேங்காயையும் மண்ணினுள் முற்றாகத் தாட்டு விடுகின்றார்கள். இது முற்றிலும் பிழையான செயன்முறை ஆகும். எனவே, மேற்குறிப்பிட்ட செயன்முறையில் மழை ஆரம்பித்திருக்கும் இவ்வேளையில் தென்னை நடுகையை மேற்கொள்ளலாம்.

**ஜெ. சத்திஜேந்திரன்**
**தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், தென்னை பயிர்ச்செய்கை சபை.**

## மீன்பிடி தொடர்பில்

# இரு நாடுகளுக்கு இடையே ஒப்பந்தம் ஏற்பட வேண்டும்

## காங்கிரஸ் எம்.பி. கே.எஸ்.அழகிரி

(சென்னை)

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் மீன் பிடிக்கவும் இலங்கை மீனவர்கள் இந்திய கடற்பரப்பில் மீன் பிடிக்கவும் இரு நாடுகளுக்கிடையில் ஒப்பந்தம் ஏற்பட வேண்டுமென காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.எஸ்.அழகிரி இலங்கை ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

இவரது இந்த கோரிக்கையை இந்திய பிரதமர் வாயிலாக இலங்கை அரசுக்கு தெரியப்படுத்தும் படியும் தாமும் இது குறித்து இலங்கை அரசிலுள்ள மற்றவர்களிடமும் இலங்கை மீனவர்களிடமும் கலந்து பேசுவதாக மஹிந்த தம்மிடம் தெரிவித்ததாகவும் கே.எஸ்.அழகிரி தமிழோசையிடம் தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் நிறுவுநர் சௌமியமூர்த்தி தொண்டமானின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்ள வந்திருந்த மஹிந்த ராஜபக்ஷவை தாம் சந்தித்து பேசிய போது இலங்கையில் வைத்து இந்த கோரிக்கையை தான் வைத்ததாக அவர் கூறினார்.



எல்லை தாண்டிவந்து மீன்பிடித்த குற்றச்சாட்டின் பேரில் தமிழக மீனவர்கள் இலங்கை சிறையிலும் இலங்கை மீனவர்கள் இந்திய சிறைகளிலும் வாடுவதை தடுக்க வேண்டுமானால் மாதம் 15 நாட்கள் இரு நாட்டு மீனவர்களும் பரஸ்பரம் அடுத்த நாட்டு கடற்பரப்பில் மீன்பிடிக்க வகை செய்யும் ஒப்பந்தம் ஏற்படுத்துவது சரியான தீர்வாக இருக்கும் என்று தாம் மஹிந்தவிடம் தெரிவித்ததாக அழகிரி கூறினார்.

இலங்கைச் சிறையில் இருக்கும் தமிழக மீனவர்களைத் தாம் நேரில் சென்று சந்தித்ததாக தெரிவித்த அழகிரி, அவர்களின் விடுதலைக்கான சட்ட ரீதியான முன்னெடுப்புக்களையும்தாம் மேற்கொண்டதாகவும் அவர் கூறினார். (அ-2)

# பரீட்சை வினாத்தாள் திருத்தப் பணிகள்

இவ் வருடத்தின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது. இப் பணிகள் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என். ஜே.புஸ்பகுமார தெரிவித்துள்ளார். விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் சுமார் 7 ஆயிரம் ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதேபோல் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் கடந்த 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதாக அவர் கூறினார். (அ-2)


**JAFFNA COLLEGE, VADDUKODDAI**

ADMISSION - 2014

FOR GRADE 1, 4, 6 &10

**மாணவர் அனுமதி – 2014**

**தரம் 1, 4, 6 & 10**

1. (அ) விண்ணப்பப் படிவங்கள் 04.09.2013 முதல் 03.10.2013 வரை பெற்றுக் கொள்ளலாம்.

(ஆ) எமது விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(இ) 03.10.2013 இற்குப் பின்னர் விண்ணப்பப் படிவங்கள் எக்காரணம் கொண்டும் விநியோகிக்கப்படமாட்டாது.

(ஈ) விண்ணப்பப் படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 03.10.2013. குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்களை நிராகரிக்கும் உரிமை நிர்வாகத்திற்கு உண்டு.

2. பிழையாக நிரப்பப்பட்டவையும் பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படலாம்.

3. தரம் 1 இற்கான விண்ணப்பப் படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் நிழற்பிரதி (Photostat Copy) இணைக்கப்பட வேண்டும்.

4. விண்ணப்பப் படிவங்கள் ஞாயிற்றுக்கிழமை, விடுமுறை தினங்களும் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

5. ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 1000

6. **வயதெல்லைகள்**

(1) தரம் 1 விண்ணப்பதாரி 01.02.2008 இற்கும் 31.01.2009 இற்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.

(2) தரம் 4 விண்ணப்பதாரி 01.02.2005 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருந்திருத்தல் வேண்டும்.

(3) தரம் 6 விண்ணப்பதாரி 01.02.2003 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

(4) தரம் 10 விண்ணப்பதாரி 01.02.1999 இல் அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

7. **பிரவேச / நேர்முகப் பரீட்சை**

தரம் 1 இற்கான நேர்முகப் பரீட்சையும்

தரம் 4, 6, 10 இற்கான தேர்வுப் பரீட்சையும்

05.10.2013 மு.ப.9 மணிக்கு ஆரம்பமாகும். தேர்வுப் பரீட்சை முடிவானது இரு வாரங்களில் வெளியாகும்.

8. (1) தரம் 6 இற்கும் மேற்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனி விடுதி வசதிகள் உண்டு.

(2) பொதுநூலகம், ஆய்வுகூடம், விளையாட்டு மைதானம், சிற்றுண்டிச்சாலை வசதிகள் வளாகத்திலே உண்டு.

*(C-4552)* **அதிபர்.**

## உரமானியத்தை பெற நிபந்தனைகள்


(கரணவாய்)

கரணவாய் கிழக்கு விவசாய சம்மேளனத்திற்குட்பட்ட விவசாயிகள் உரமானியங்களைப் பெற்றுக் கொள்ள முன்னாயத்தங்கள் செய்ய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்படி விவசாயிகள் சொந்த வயல்களிலும் மற்றும் குத்தகை வயல்களிலும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள் தமது வயலுக்கான உறுதிப் பத்திரத்தை விவசாய சம்மேளனத்தில் சமர்ப்பித்த பின்னர் அவர்களால் வழங்கப்படும் விண்ணப்ப படிவத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

அத்துடன், வயல் நிலங்களின் ஒவ்வொரு பரப்புக்கும் 1.50 சதம் வீத வரியை கரணவாய் கிழக்கு விவசாய சம்மேளன உபதலைவரிடம் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

மேற்படி கூறப்பட்ட விடயங்களை நிவர்த்தி செய்த பின்னர்தான் உரமானியங்களை விவசாயிகள் பெற்றுக்கொள்ள முடியுமென கரணவாய் கிழக்கு விவசாய சம்மேளனத் தலைவர் க.சி.அர்ச்சலிங்கம் அறிவித்துள்ளார். (அ-9-60)




# யாழ்ப்பாணக் கோட்டையில் தொடரும் கலாசார சீரழிவுகள்.

## ஊடகவியலாளர்களுக்கு கத்திமுனையில் மிரட்டல்

(யாழ்ப்பாணம்)

**பாடசாலை மாணவிகளின் எதிர்காலத்தையும் யாழ்ப்பாணத்தின் கலாசாரத்தையும் திட்டமிட்டு சீரழிக்கும் நடவடிக்கைகள் யாழ். கோட்டைப் பகுதியில் இடம்பெற்று வருவதாக ஊடகங்கள் மூலம் பலமுறைகள் சுட்டிக்காட்டிகாட்டப்பட்டிருந்தும் இதுவரையில் எந்தவொரு நடவடிக்கைகளும் இது தொடர்பான அதிகாரிகளால் எடுக்கப்படவில்லை. இந்நிலையில் நேற்றைய தினம் ஊடகவியலாளர்கள் சிலர் கத்திக்குத்திற்கு ஆளாகும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.**

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் பாடசாலை மாணவிகள் சுமார் 10 பேர்வரை (14 வயது தொடக்கம் 17 வயது வரையிலான) தனியார் வகுப்புகளுக்கு செல்வதாக பெற்றவர்களை ஏமாற்றி விட்டு சில இளைஞர்களுடன் கோட்டைப் பகுதியில் உள்ள மறைவிடங்களில் உல்லாசமாக இருந்துள்ளனர்.

இந்நிலையில் பாடசாலை மாணவிகளின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டும் யாழ்ப்பாணத்தின் கலாசாரத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்குடனும் இம் மாணவிகளை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு 5 பேர் கொண்ட குழு ஊடகவியலாளர் குழு அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பாக அவர்கள் உடனடியாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கும் அறிவித்ததோடு, மாணவர்களுக்கு அவ்விடங்களுக்கு வருவதில் ஏற்படும் விளைவுகளை எடுத்துக் கூறி அவர்களை அவரவர் வீடுகளுக்கும் அனுப்பி வைத்தனர். இதனையடுத்து தம்முடன் சேர்ந்து வந்த மாணவிகளை அனுப்பி வைப்பதற்கு அவர்கள் யார் எனவும் அப்பெண்களே தம்முடன் வரத்தயராக இருந்த நிலையில் அவர்களைத் தடுக்க அவர்கள் யாரெனவும் ஊடகவியலாளர்களுடன் முரண்பட்ட அங்கிருந்து இளைஞர் குழு உடனடியாக தமக்கு ஆதரவு தேடும் நோக்கில் சுமார் 20 இற்கும் மேற்பட்ட தமது சகபாடிகளை அழைத்து ஊடகவியலாளர்களின் மேல் தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்தனர்.

இவ்வேளை மாணவியொருவரை அழைத்து வந்து பாலியல் சேட்டைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 18 வயதான இளைஞன் ஒருவன் ஊடகவியலாளர்களினால் அச் சேட்டைகள் தடுத்து நிறுத்தப்பட்டதன் ஆத்திரத்தில் சிறிய கத்தியொன்றை எடுத்து ஊடகவியலாளர்களைத் தாக்கமுற்பட்டான்.

இதனையடுத்து கோட்டைப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டதோடு, சுற்றுலாவுக்கென அங்கு வருகை தந்திருந்த வெளிநாட்டவர்களும் இச்சம்பவத்தை கண்ணுற்று அச்சத்தில் அங்கிருந்து வெளியேற முற்பட்டனர்.

இவ் இளைஞர்கள் அவ்வேளையில் மது போதையிலிருந்ததோடு, போதைப் பொருட்களையும் பாவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இச் சமபவத்திற்கு முன்பாக யாழ். வேம்படி வீதியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் யாழ்ப்பாண கிளைக் காரியாலயத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற தேர்தல் கலந்துரையாடல் ஒன்றில் செய்தி சேகரிக்கச் சென்று காரியாலயம் முன்பாக தரித்து நின்ற ஊடகவியலாளர்களை இளைஞர் குழுவொன்று அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது (அ-6)

## அங்கத்துவ கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது

அரச சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தினரால் மாதாந்த அங்கத்துவக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.

இந் நிதியத்தினரால் முன்னர் மாதாந்த அங்கத்துவக் கட்டணம் 20 ரூபாவாக இருந்த நிலையில் தற்போது 50 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

அத்தோடு இறப்பு மானியம், வைத்தியசாலை கொடுப்பனவு, கண்சிகிச்சை, புலமைப்பரிசில், மூளை சத்திரசிகிச்சை போன்றவற்றுக்கு இது வரை வழங்கப்பட்டு வந்த கொடுப்பனவுகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

மாதாந்த அங்கத்துவக் கட்டணம் அதிகரிக்கப்பட்டமை தொடர்பில் அங்கத்தவர்களிடம் சம்மதத்தினைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் நம்பிக்கை நிதியத்தின் செயலாளரினால் அங்கத்தவர்களுக்கு கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (அ-9-10)



சுன்னாகம் றோட்டறிக் கழகமும் மானிப்பாய் இளைஞர் சம்மேளன மும் இணைந்து மாதகல் லூர்த்துமாதா ஆலய வளாகத்தில் இளைஞர் தின நிகழ்வுகளை அண்மையில் நடத்தியது. இதில் இடம்பெற்ற விளை யாட்டு நிகழ்வில் பங்கு கொண்டவர்களுக்கு பரிசில் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் பரிசில் பெற்றவர்களைப் படத்தில் காணலாம். (படம்:-மானிப்பாய் செய்தியாளர்)

## ஆர்வமுள்ள தமிழ் இளையோர் பொலிஸ் சேவையில் இணையலாம்

வடமாகாணத்தில் 10 ஆயிரம் தமிழ் பொலிஸாரை புதிதாக இணைத்துக் கொள்வதற்கான கோரிக்கையை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் விடுத்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கைக்கு அமைய ஜனாதிபதி முதற்கட்டமாக பொலிஸ் சேவைக்கு 5 ஆயிரம் தமிழ் இளைஞர், யுவதிகளை இணைத்துக் கொள்ள இணக்கம் தெரிவித்துள்ளார்.

விரைவில் வடமாகாணத்தில் முதற்கட்டமாக 5 ஆயிரம் தமிழ் பொலிஸாருக்கான விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன.

ஆர்வமுள்ள தமிழ் இளைஞர், யுவதிகள் பொலிஸ் சேவையில் இணைந்து கொள்ள முடியும். எனவே, இதனை வேலைவாய்ப்பாக மட்டுமன்றி தமிழ்மொழி மூலமாக எமது மக்கள் தமது முறைப்பாடுகளை செய்வதிலும் உதவிகளைக் பெற்றுக்கொள்வதிலும் எதிர்கொள்கின்ற அசௌகரியங்களை நிவர்த்தி செய்து கொள்வதற்கு இந்த வாய்ப்பை எமது இளைஞர், யுவதிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார். (அ-2)

## மயிலிட்டி பிரதேசத்தில் 6 ஆம் திகதி ஆலய வழிபாடு

### அமைச்சர் டக்ளஸ் ஏற்பாடு

மயிலிட்டியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள், தமக்கு அங்கு கோயில் வழிபாடுகளில் கலந்து கொள்ள அனுமதி பெற்றுத் தருமாறு அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

மயிலிட்டி மக்களின் கோரிக்கையை அடுத்து, எதிர்வரும் 6 ஆம் திகதி அம் மக் களை கோயில் வழிபாடுகளில் கலந்து கொள் ளச் செய்வதற்காக அமைச்சர் நேரடியாகவே மயிலிட்டிக்கு அழைத்துச் செல்லவுள்ளார்.

எனவே, மயிலிட்டியைச் சேர்ந்த மக்கள் எதிர்வரும் ஆறாம் திகதி அங்கு செல்வதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

வாழ்வின் வெற்றி என்பது வாழும் விதத்தில் உள்ள சத்தியத்தை பொறுத்தது , ~ ஓர் அறிஞன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# மாம்பழத்தை இழந்த முருகனுக்கு இழப்பின் வலி நன்கு தெரியும்

நல்லூர்க் கந்தனுக்கு இன்று மாம்பழத் திருவிழா. நாரதர் சிவனிடம் கொடுத்த மாங்கனியை விநாயகனுக்கா? முருகனுக்கா? கொடுப்பது என்ற சர்ச்சையில், போட்டி நடத்தி இருவரில் யார் வெல்கிறார்களோ! அவர்களுக்கு மாங்கனியை கொடுப்பது என முடிவெடுக்கப்படுகிறது.

இந்த உலகைச்சுற்றி யார் முதலில் வலம் வருகிறார்களோ! அவருக்கே மாங்கனியென்று அறிவிக்கப்படுகிறது.

மாங்கனி தனக்கே கிடைக்க வேண்டும் என விருப்பம் கொண்ட முருகன் மயில் மீது ஏறி உலகை வலம் வருகிறான்.

விநாயகனோ மிகவும் நிதானமாக சிந்திக்கிறார். அம்மையப்பனே உலகம். ஆகையால் அம்மையப்பனை வலம் வந்தால் உலகை வலம் வந்ததற்கு ஒப்பானது என்ற முடிபுடன் அம்மை அப்பனாகிய சிவனையும் பார்வதியையும் வலம் வருகிறார்.

விநாயகரின் முடிபு ஏற்றுக்கொள்ளப்பட்டு மாங்கனி அவருக்கு வழங்கப்படுகிறது.

உலகை வலம்வந்த முருகன் பார்க்கிறான். தன் விருப்புக்குரிய மாங்கனி அண்ணனின் கையிலிருக்கிறது. போட்டியில் மோசடி நடந்து விட்டதாக வாதிடும் முருகன் கோபம் கொண்டவனாக, ஆண்டிக்கோலத்துடன் பழநி மலைக்குச் சென்று அங்கு தனியரசு அமைக்கின்றான்.

ஒரு மாங்கனி கிடைக்கவில்லை என்பதற்காக உரிமை மீறல் நடந்துவிட்டதெனக் கோபம் கொண்டவன் முருகன். அதுவுமன்றி ஒரு மாங்கனி கிடைக்கவில்லை என்பதற்காக பழநி மலையில் வீற்றிருந்து அறுபடை வீடுகளில் ஒன்றை அமைத்து தன் திறத்தை வெளிப்படுத்திய முருகனின் திருவிளையாடலை உணர்த்துவதே நல்லூரில் இன்று காலைவேளை நடக்கும் மாம்பழத்திருவிழாவாகும்.

மாம்பழத்தை இழந்த அந்த வேலவனுக்கு இழப்பின் வலி நன்கு தெரியும். அப்படியானால் மண்ணை, மக்களை, வாழ்வை இழந்த எங்களின் இழப்பிற்கு இன்னும் அவன் பரிகாரம் தேடமால் இருப்பது ஏன்?

மாம்பழத்தை இழந்த பழநி ஆண்டிக்கு மகா அபிசேகம் நடைபெறும். மாம்பழத்தை இழந்தால் தான் தனக்கு மகா அபிஷேகம் நடப்பதாக அவன் கருதிவிடுகின்றான்.

எல்லாம் மாப்பாணர் கொடுக்கின்ற இடம். டேய்! முருகா! எங்களுடைய பிரச்சினைக்கு ஒரு தீர்வைத்தா. அதுவரை உனக்கு மகா அபிஷேகம் கிடையாது என்று முருகனை அதட்ட வேண்டும்.

அதுமட்டுமல்ல, மாம்பழத்தை வென்ற விநாயகனுக்கே மகா அபிஷேகம் என்றும் வெருட்ட வேண்டும்.

வென்றவன் இருக்க தோற்றவனுக்கு என்ன மகா அபிஷேகம்? மாம்பழத்தை இழந்தவனுக்கு மகா அபிஷேகம் செய்தால் அவனுக்கு (எங்கள்) இழப்பின் வலி எங்ஙனம் தெரியும்?

ஆகையால், மாப்பாணர் ஒருகால் வெருட்டிப் பார்க்கட்டும். நிச்சயம் அவன் வழிக்கு வருவான். எங்களுக்கு வழிகாட்டுவான். தீர்வு தருவான். நல்லூரானால் முடியாதது என்ன தான் இருக்கிறது!

# சர்வதேச அழுத்தங்களுக்கு இலங்கை அஞ்சத் தேவையில்லை

## ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு சர்வதேச அழுத்தங்கள் ஏற்படக் கூடும் என அஞ்சத்தேவையில்லை.

பயங்கரவாதத்துடன்சம்பந்தப்பட்டவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதாக ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கண்டி குண்டசாலையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் இதனை கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்குவந்தஐக்கியநாடுகள்மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை பயங்கரவாததலைவர்களின்மனைவிமாரையும்சந்தித்துபேச்சுவார்த்தை நடத்தினார்.

அது மட்டுமல்ல, பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்கள் கூட்டமைப்பின் சார்பில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

நாட்டிற்குள் செயற்படும் சக்திகள் சம்பந்தமாக மட்டுமே அவதானத்துடன் இருக்க வேண்டும். அமெரிக்காவுக்கு அஞ்ச தேவையில்லை.

நவநீதம்பிள்ளையின் வருகையின் பின்னர் இலங்கைக்கு சர்வதேச அழுத்தங்கள் ஏற்படக் கூடும் என முன்வைக்கப்படும் கருத்துக்கள் தொடர்பில் அச்சமடைய தேவையில்லை என்றார். (எ-8)

# இந்திய மீனவர்களின் அத்துமீறல் வடமராட்சிக் கடலில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்கள் தமது கடல் எல்லைக்குள் வந்து மீன்பிடியில் ஈடுபடுவதும் மீனவர்களுக்கு அழுத்தங்கள் கொடுக்கப்படுவதும் அதிகரித்திருப்பதால், வல்வெட்டித்துறை மற்றும் பருத்தித்துறை பிரதேசங்களை சேர்ந்த சுமார் ஆயிரம் மீனவர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக வல்வெட்டித்துறை மீனவர் அமைப்புகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

வல்வெட்டித்துறை பகுதியில் தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பான செய்திகளை சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்களிடம், இது தொடர்பாக கருத்து வெளியிட்ட மீனவர் சங்கத்தின் தலைவர் முத்துத் தம்பிசுந்தசாமி, யாழ். மீனவர்களுக்குநேரும் இந்த அநீதி தொடர்பில் எவரும் எவ்வித மான கவனத்தையும் செலுத்தவில்லை.

இந்த பிரச்சினைக்கு தீர்வை வழங்கும் எந்த அரசியல் க்ட்சியாக இருந்தாலும் அந்த கட்சிக்கு மாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பது என்று மீனவர்கள் தீர்மானித்துள்ளனர்.

கடலில் தினமும் இந்திய மீனவர்களுக்கும் எமது மீனவர்களுக்கு இடையில் மோதல் ஏற்படுகிறது. இந்திய மீனவர்கள் மீன்பிடி உபகரணங்களையும் வலைகளையும் சேதப்படுத்துகின்றனர்.

பிரதேச அரசியல்வாதிகள், பாதுகாப்பு தரப்பினர் உட்பட அனைவருக்கும் இது பற்றி தெரியப்படுத்திய போதும் இதுவரை அதற்குநியாயமானதீர்வுகிடைக்கவில்லை.

இதனால் சகல அரசியல் அமைப்புகள் மீதும் மீனவர்கள் கடும் அதிருப்தி கொண்டுள்ளனர். பல மணித்தியாலங்கள் மரணத்துடனும் கடல் வளங்களை கொள்ளையிடுவோரோடும், கடலில் போராடினாலும் குடும்பத்தை கொண்டு நடத்தபணத்தைசம்பாதிக்கமுடியவில்லை.

இதனால்எமதுமீனவர்சங்கம்மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஒரு தீர்மானித்திற்கு வந்துள்ளது என்றார். (எ-8)

# போதைப்பொருள் கடத்தியோரின் தகவல்களை வெளியிடுங்கள்

(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தியவர்கள் பற்றிய தகவல்கள் வெளியிடப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

250 கிலோ கிராம் எடையுடைய ஹெரோயின் போதைப்பொருளை அண்மையில் கொழும்பு சுங்கப் பிரிவினர் கைப்பற்றியிருந்தனர்.

இந்தப்போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளின் பின்னணியில் செயற்பட்டவர்களை அம்பலப்படுத்துமாறு ஐக்கிய தேசியக்கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கோரியுள்ளார்.

மீட்கப்பட்ட போதைப்பொருளின் சந்தைப் பெறுமதி 250 கோடி ரூபாய் என தெரியவந்துள்ளது என்றும் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# வேட்பாளர் வீட்டின் மீது கழிவு ஒயில் வீச்சு

## சக வேட்பாளர் சிவஞானம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரின் வீட்டின் மீது கழிவு ஒயில் ஊற்றி மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்திற்கு அக் கட்சி சார்பில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் இலங்கை தமிழரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் சீ.வீ.கே.சிவஞானம் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் சூழலியலாளர் பொ.ஐங்கரநேசனின் வீட்டின் மீது நேற்றுமுன்தினம் அதிகாலை இனம் தெரியாத நபர்களினால் கழிவு ஒயில் ஊற்றி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

அத்தோடு பூசணிக்காய் வெட்டி குங்குமம் பூசி வைத்து விட்டுச் சென்றுள்ளனர் அந்த இனம் தெரியாதவர்கள்.

யாழ்.திருநெல்வேலிப் பகுதியிலுள்ள அவரது வீட்டில் இடம்பெற்ற மேற்படி சம்பவம் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சக வேட்பாளர் என்ற ரீதியில் இந்தத் தாக்குதல் சம்பவத்தை தான் கண்டிப்பதாக அவர் கூறினார். (அ-6)

# கற்றல் நடவடிக்கைகள் 23 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியில் க.பொ.த உயர்தர பரீட்சையின் விடைத்தாள்கள் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறுவதால் எதிர்வரும் 23 ஆம் திகதியன்றே கற்றல் நடவடிக்கைகளுக்காக கல்லூரி மீண்டும் ஆரம்பமாகும் என கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் அறிவித்துள்ளார். (அ)

# ரயிலின் முன் பாய்ந்து இளைஞன் தற்கொலை

(வவுனியா)

புகையிரதத்தின்முன் பாய்ந்து இளைஞர் ஒருவர் தற்கொலை செய்துள்ளார்.

அம்பன்பொல–வெரஹெரயாம என்ற பிரதேசத்தில் கொழும்பில் இருந்து வவுனியா நோக்கி நேற்றுமுன்தினம் மாலை பயணித்த புகையிரதத்தின் முன் பாய்ந்ததிலேயே இந்த தற்கொலை சம்பவம் நேர்ந்துள்ளது.

இச் சம்பவத்தில் 24 வயதுடைய றொஷான் என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் அம்பன்பொல வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப் பட்டுள்ளது.

குறித்த இளைஞன்தற்கொலைசெய்து கொண்டமைக்கான காரணம் கண்டறியப்படவில்லை என தெரிவித்த அம்பன்பொல பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டனர். (அ-2)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## வாழ்வில் நிறைவுபெற வழி



நாம் பொறுப்புணர்ச்சியில் அழுத்தமாக நின்று கொண்டு மற்றவர்கள் இவ்வாறுதான் நடக்கவேண்டுமென்று நாம் எல்லைகட்டிக்கொண்டால் நமது விருப்பத்துக்கும் முடிவுக்கும் ஒத்துவராத எவர் மீதும் வெறுப்பு உண்டாகும். நமக்கு வாழ்வில் என்றுமே நிறைவு ஏற்படாது.

நமது பொறுப்புணர்ச்சி, கடமை, இவற்றின்கூறாக உலகையும் மக்களையும் நம்மோடு வாழ்வில் தொடர்பு கொள்வோர்களையும் அவர்கள் தன்மை, செயல் இவைகளையும் அவை அமைந்துள்ளவாறு ஒப்புக்கொள்ளவேண்டும்.

இந்த மனவிரிவில், இளகலில் நின்றுகொண்டு மீண்டும் நம்மையும் உலகையும் நோக்குவோம்.

நாம் எங்கு, எவ்வாறு, என்ன நிலையில் இருக்கிறோம். இவற்றைக்கொண்டு பிறருக்கு என்ன செய்யமுடியும் என்று அன்போடு அகம் நோக்கி நின்று முடிவு கண்டு நமது கடமையை இயன்றவாறு செய்வோம்.

உலகம் வேண்டுவதையெல்லாம், சமுதாயத்துக்குத் தேவைப்படுவதையெல்லாம் நாம் அளித்துவிடமுடியாது. நம் வரையில் இயன்றதைச் செய்து நிறைவுபெறுவோம் என்ற முடிவில், நடப்பில்தான் நாம் நிறைவு காணமுடியும்.

அன்புதான் நமது வாழ்வின் ஊற்று. சிறிது வெறுப்புணர்ச்சியானாலும் அது நமது உள்ளத்தை இனிமை கெடச் செய்யும்.

# தெற்குடன் உறவை ஏற்படுத்தவே தமிழ் யுவதிகள் இராணுவத்தில் இணைவு

## வன்னி படைகளின் கட்டளைத் தளபதி

(குருமன்காடு)

தமிழ் மக்கள் மேல் தமிழ் நாட்டவருக்கு உண்மையான பாசம் கிடையாது. அவர்கள் தமது சுய நலத்திற்காகவே இலங்கையைப் பயன்படுத்துகின்றனரென வன்னி படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

கடந்த 26ஆம் திகதி 45 தமிழ் யுவதிகளை இராணுவத்தின் தரைப்படைக்கு இணைக்கும் நிகழ்வு வன்னிப் படைத் தலைமைச் செயலகத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்தி வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையில் ஓர் உறவுப் பாலத்தை ஏற்படுத்தும் முகமாக வன்னிப் பிரதேசத்தில் முதன் முறையாக தமிழ் யுவதிகளை இராணுவத்தில் இணைத்துள்ளோம். அவர்கள் இந்த நாட்டு மக்களுக்கு முன்மாதிரியானவர்கள். இன்னும் 100 வருடங்களுக்கு இந்த நாட்டில் யுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை. இங்கு பயமில்லாது வாழவும் முடியும்.

ஆனாலும், எமது நாட்டுக்கு எதிராக சில நாடுகள் செயற்படுகின்றன. குறிப்பாக தமிழ் மக்கள் மீது அக்கறை இருப்பதாக காட்டி தமிழ்நாட்டினர் எமது நாட்டுக்கு எதிராக செயற்படுகிறார்கள். அவர்களுக்கு உண்மையில் தமிழ் மக்கள் மீது பாசமோ அக்கறையோ கிடையாது. ஏனெனில், தமிழ்நாட்டு மீனவர்களே எமது கடற்பகுதியில் நுழைந்து தமிழ் மீனவர்களின் பொருளாதாரத்தை பாதிக்கும் வகையில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகிறார்கள். தமிழ் மக்களில் அக்கறை இருக்குமாயின் இவ்வாறு செய்வார்களா? எனவும் அவர் தெரிவித்தார்.

(அ-ம-250)

வவுனியாவில்

# இடி விழுந்ததில் வீடு சேதம்

(குருமன்காடு)

வவுனியாவில் இடியுடன் கூடிய மழையின்போது மரக்காரம்பளை, தம்பனை வீதியில் உள்ள வீடு ஒன்றை இடி தாக்கியதில் வீட்டின் கூரைப் பகுதியும் சில உபகரணங்களும் சேதமடைந்துள்ளன.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது, நேற்று முன்தினம் இடி,மின்னலுடன் கூடிய மழை பெய்து கொண்டிருந்தபோது, மாலை ஐந்து மணியளவில் மரக்காரம்பளை தம்பனை குள வீதியில் உள்ள ஒரு வீட்டின் மீது இடி விழுந்துள்ளது.


இதனால் வீட்டின் மேற் கூரை சேதமடைந்ததோடு, வீட்டின் சில உபகரணங்களும் சேதமடைந்துள்ளன. வீட்டில் இருந்தவர்கள் வீட்டின் முன் பகுதியில் நின்றதால் உயிராபத்து எதுவும் ஏற்படவில்லை.

சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா தெற்கு பிரதேச சபை உறுப்பினர் கதிர்காமு பரமேஸ்வரன் இச் சம்பவம் பற்றி வவுனியா ம[illegible]ட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவிற்கு அறிவித்துள்ளதாக தெரிவித்தார்.

இதேவேளை, வவுனியா நெடுங்கேணி சேனை புலவில் இடிதாக்கியதில் இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

(ம-250)

# இலஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவு மேர்வினுக்கு அழைப்பாணை



பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வாவிடம் இலஞ்ச ஊழல் ஒழிப்புப் பிரிவினர் விசாரணை நடத்த உள்ளனர்.

அமைச்சரின் சொத்துக்கள் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்த இலஞ்ச ஊழல் ஒழிப்புப் பிரிவுக்கு ஆஜராகுமாறு அமைச்சருக்கு அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரின் புதல்வர் மாலக சில்வாவின் சொகுசு வாகனம் தொடர்பில் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யார் இந்த முறைப்பாட்டைச் செய்தார்கள் என்பது பற்றிய தகவல்கள் வெளியிடப்படவில்லை.

அமைச்சரின் சொத்துக்களின் அடிப்படையில், மிகவும் விலை உயர்ந்த சொகுசு வாகனங்களை கொள்வனவு செய்யக் கூடிய வசதி கிடையாது என முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் சில ஆளும் கட்சி அமைச்சர்கள் தொடர்பிலும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(அ-2)

# முள்ளிவாய்க்கால் நினைவு சின்னம் தஞ்சாவூரில்



தமிழ்நாடு தஞ்சாவூரில் அமைக்கப்பட்டு வரும் முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னத்தை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா திறந்து வைக்கக் கூடும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 2009 ஆம் ஆண்டில் இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தின்போது முள்ளிவாய்க்கால் பகுதியில் அப்பாவி தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

உயிர்த்தியாகம் செய்த அந்த இலங்கைத் தமிழர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், நினைவுச் சின்னம் தஞ்சாவூர் விளார் கிராமத்தில் அமைக்கப்படுகிறது.

நினைவுச்சின்னம் அருகில், அன்னை சிலை ஒன்றும் நிறுவப்படுகிறது.

நினைவுச் சின்னத்தை முதல்வர் ஜெயலலிதா திறந்துவைக்கவேண்டுமென இலங்கைத் தமிழ்களுக்கு ஆதரவான இயக்கத்தின் சார்பில் அனுமதிக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நினைவுச் சின்னத்தை திறந்து வைப்பதன் மூலம் உலகத் தமிழர்களின் அன்பை பெறமுடியும்.

இலங்கைத் தமிழர்களின் ஆதரவு வாக்குகளும் லோக்சபா தேர்தல்களில் அ.தி.மு.கவிற்கு கிடைக்கும் என்பதால் நினைவுச் சின்ன திறப்பு விழாவில் முதல்வர் பங்கேற்க வாய்ப்பிருப்பதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(அ-2)

# வடமாகாண தமிழ் இலக்கிய பெருவிழாவில் விருது பெறுவோர் விபரம்

(மல்லாவி)

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற வடமாகாண தமிழ் இலக்கிய பெருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமையும் இன்று திங்கட்கிழமையும் மு/வித்தியானந்தா கல்லூரியில் நடைபெற்று வருகின்றது.

காலையில் ஆய்வரங்கமும் மாலையில் கலை நிகழ்வுகளுமாக இடம்பெறும் இந்நிகழ்வில் வடமாகாண கலை பண்பாட்டு பாரம்பரியங்களை பிரதிபலிக்கும் பல்வேறு கலை நிகழ்வுகள் ஆற்றுகை செய்யப்படுகின்றன.


இந்நிகழ்வில் ஆளுநர் விருதை கலாபூஷணம் ஆசீர்வாதமுத்து மரியநாயகம், கலாபூஷணம் கனக சபை நடேசன், கலாபூஷணம் கந்தையா விஜயரட்ணம், கலாபூஷணம் மைக்கல் உதயகுமார், கலாபூஷணம் பொன்னையா சேதுபதி, கலாபூஷணம் வஸ்ரியாம்பிள்ளை ஜேக்கப் (அல்பிரட்), கலாபூஷணம் இளையதம்பி நடராஜா, கலாபூஷணம் கந்தையா ஆறுமுகம், கலாபூஷணம் வெலிச்சோர் யூலியஸ் கொன்ஸ்ரன்ரைன், கலாபூஷணம் பொன்னையா இராஜகுலசிங்கம், கலாபூஷணம் இராசையா திருஞானசம்பந்தன், கலாபூஷணம் முவஎட்ட கம ஆனந்ததேரர், கலாபூஷணம் சுப்பிரமணியம் சிவராசா, கலாபூஷணம் சிற்றம்பலம் சிவானந்தராஜா, முஹம்மது ராவுத்தர் முஹம்மது ஹனிபா, பொன்னுத்துரை கனகரத்தினம், கலாபூஷணம் நவரத்தினராசா பாலகோபால், நடேசு சுப்பிரமணியம், கலாபூஷணம் முஹம்மது காட்டுடாவா ஹபீபு முஹம்மது ஆகியோருக்கு வழங்கப்படவுள்ளது.

இலக்கிய விருது கவிதைத்துறை க.சின்னராஜன், நாடகத்துறை க.இ.கமலநாதன், ஆய்வும் விமர்சனமும் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, சிறுகதை தேவராசா முகுந்தன், நாவல் குருசுமுத்து இராஜப்பு, உயர்கல்வி பேராசிரியர் மா.நடராஜசுந்தரம், சிறுவர் இலக்கியம் கலாநிதி நா.தர்மராஜா (அகளங்கன்), பல்துறை சமயம் கு.ரஜீபன், பல்துறை வரலாறு சி.கா.கமலநாதன், பல்துறை பொது திருமதி ப.சோமகாந்தன் ஆகியோருக்கு வழங்கப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளனர்.

(ம-15)








முல்லைத்தீவு மாவட்டத்தில் வடமாகாண தமிழ் இலக்கிய பெருவிழா வெகு சிறப்பாக இடம்பெற்றுள்ளது. முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி மண்டபத்தில் நேற்று முல்லை.மாவட்ட முன்னாள் தமிழ்துறைத் தலைவர் யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வின் சில காட்சிகள்...

(படங்கள்:- மல்லாவிச் செய்தியாளர்)

# ஐ.பி.எல்.கிண்ணத்தை வென்றது சாய்னா அணி



இந்தியன் பட்மின்டன் லீக் தொடரில் சாய்னாவின் ஐதராபாத் ஹாட்ஷாட்ஸ் அணி, சிந்துவின் அவாத் வாரியர்ஸ் (லக்னோ) அணியை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

இந்தியன் பிறீமியர் லீக் (ஐ.பி.எல்), இந்தியன் ஹொக்கி லீக்கைத் (ஐ.ஹெச்.எல்) தொடர்ந்து இந்தியாவின் முக்கிய நகரங்களில் முதலாவது இந்தியன் பட்மின்டன் லீக் (ஐ.பி.எல்.இ) தொடர் நடைபெற்றது.

மும்பையில் நேற்றுமுன்தினம் நடந்த இறுதிச்சுற்றில் சாய்னா நெஹ்வாலின் ஐதராபாத் ஹாட்ஷாட்ஸ் அணி, சிந்து வழிநடத்தும் அவாத் வாரியர்ஸ் அணியை எதிர்கொண்டது.


ஆடவர் ஒற்றையர் முதல் போட்டியில் அவாத் வாரியர்ஸ் அணியின் சிறிகாந்த் 21-12, 21-20 என்ற நேர் செட் கணக்கில் ஐதராபாத்தின் டனாங்சக்கை வீழ்த்தினார்.

மகளிர் ஒற்றையரில் ஐதராபாத் அணியின் சாய்னா நெஹ்வால் 21-15, 21-7 என்ற நேர் செட் கணக்கில் அவாத் வாரியர்ஸ் அணியின் சிந்துவை தோற்கடித்தார். இதனையடுத்து போட்டி 1-1 என சமநிலை அடைந்தது.

அடுத்து நடந்த ஆடவர் இரட்டையரில் ஐதராபாத் அணி, அவாத் வாரியர்ஸ் அணியை வீழ்த்தி 2-1 என்று முன்னிலை வகித்தது.

பின் நடந்த விறுவிறுப்பான ஆடவர் ஒற்றையர் 2-வது போட்டியில் ஐதராபாத் அணியின் அஜய் ஜெயராம், அவாத் அணியின் குருசாய்தத்தை 10-21, 21-17, 11-7 என்ற செட் கணக்கில் வீழத்தினார்.இதன் மூலம் ஐதராபாத் அணி 3-1 என அவாத் அணியை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது.

# இங்கிலாந்து ஆஸியை வீழ்த்தியது



அவுஸ்திரேலியா -இங்கிலாந்து அணிகள் மோதிய 2-வது மற்றும் கடைசி இருபது-20 கிரிக்கெட் போட்டி நேற்றுமுன்தினம் இங்கிலாந்தில் நடந்தது.

முதலில் விளையாடிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 195 ஓட்டங்களைக் குவித்தது.

தொடக்க வீரர் ஹால்சின் ஆட்டம் அதிரடியாக இருந்தது. அவர் 61 பந்துகளில் 94 ரன் எடுத்தார். இதில் 11 பவுண்டரிகளும் 2 சிக்சரும் அட்ங்கும். மற்றொரு தொடக்க வீரர் மைக்கேல் லம்ப் 27 பந்தில் 43 ரன்னும் லுகே ரைட் 30 ரன்னும் எடுத்தனர்.

அவுஸ்திரேலியா தரப்பில் பவாத் அகமது 3 விக்கெட்டும் பவ்னெர் 2 விக்கெட்டும் கைப்பற்றினார்கள்.

பின்னர் விளையாடிய அவுஸ்திரேலிய அணியால் 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 168 ஓட்டங்களே எடுக்க முடிந்தது.

இதனால் இங்கிலாந்து அணி 27 ரன்னில் வெற்றி பெற்றது. வோர்னர் அதிகபட்சமாக 42 பந்தில் 53 ரன் எடுத்தார். இதில் 5 பவுண்டரியும் 3 சிக்சரும் அடங்கும். இங்கிலாந்து தரப்பில் டெர்ன்பேஞ்ச் 3 விக்கெட்டும் பிரிக்ஸ் 2 விக்கெட்டும் ஸ்டீவன் பின், பிராட், ஜோரூட் தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினார்கள்.


இந்த வெற்றி மூலம் இங்கிலாந்து அணி முதல் ஆட்டத்தில் தோற்றதற்கு பதிலடி கொடுத்தது.

2 போட்டி கொண்ட 20 ஓவர் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடிந்தது. 5 டெஸ்ட் கொண்ட ஆசஷ் தொடரை இங்கிலாந்து 3-0 என்ற கணக்கில் கைப்பற்றி இருந்தது.

இங்கிலாந்து - அவுஸ்திரேலிய அணிகள இடையேயான 5 ஒருநாள் போட்டித் தொடரில் முதல் ஆட்டம் வருகிற 6-ந் திகதி லீட்ஸ் மைதானத்தில் நடக்கிறது.

ஒருநாள் தொடருக்கு முன்னதாக அவுஸ்திரேலிய அணி ஸ்காட்லாந்துடன் ஒரே ஒரு இருபது-20 போட்டியில் விளையாடுகிறது. இந்த ஆட்டம் நாளை எடின்பார்க்கில் நடக்கிறது.

## அமெரிக்க ஓபன் டென்னிஸ் 4வது சுற்றுக்கு நடால்



கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயார்க் நகரில் நடைபெற்று வருகிறது.

உலகின் இரண்டாம் நிலை வீரரும் முன்னாள் சம்பியனுமான ரபேல் நடால் 3-வது சுற்றில் குரோஷியாவை சேர்ந்த இவான் டோடிக்கை எதிர் கொண்டார்.

இதில் நடால் 6-4, 6-3, 6-3 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வென்று 4-வது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

மற்ற ஆட்டங்களில் டேவிட் பெரர், டோமி ராபர்ட்டோ (ஸ்பெயின்), பிலிப் (ஜேர்மனி) டிஸ்பரோவிச் (செர்பியா) ஆகியோர் வென்று 4-வது சுற்றுக்கு முன்னேறினார்கள்.

உலகின் இரண்டாம் நிலை வீராங்கனையான விக்டோரியா அசரென்சா (பெலாரஸ்) 3-வது சுற்றில் 26-ம் நிலை வீராங்கனையான அனலால் கோர்னெட்டை (பிரான்ஸ்) எதிர்கொண்டார். இதில் அசரென்சா 6-7, (2-7), 6-3, 6-2 என்ற கணக்கில் வென்று 4-வது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

மற்றொரு ஆட்டத்தில் சுனா இவானோவிக் (செர்பியா) 4-6, 7-5, 6-4 என்ற கணக்கில் அமெரிக்காவை சேர்ந்த கிறிஸ்டினாவை வீழ்த்தினார்.

உலகின் 6-ம் நிலை வீராங்கனையான கரோலின் வோஸ்னி யாக்கி (டென்மார்க்) 3-வது சுற்றில் அதிர்ச்சிகரமாக தோற்றார். இத்தாலியை சேர்ந்த கேமிலா 4-6, 6-4, 6-3 என்ற செட் கணக்கில் வேஸ்னி யாக்கியை தோற்கடித்து 4-வது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

இதே போல 14-ம் நிலை வீராங்கனை மரியா கிர்லென் கோ (ரஷ்யா) பீட்டர் குவிட்டோவா (செக்குடியரசு) ஆகியோரும் அதிர்ச்சிகரமாக 3-வது சுற்றில் தோற்றனர்.

# சீனிவாசனுக்கும் நோட்டீஸ்

ஐ.பி.எல் கிரிக்கெட்டில் நடந்த சூதாட்டம் தொடர்பாக சீனிவாசன் மருமகனும், சென்னை அணியின் "கௌரவ" உறுப்பினருமான குருநாத் மெய்யப்பன் சிக்கினார்.

இதனால் பி.சி.சி.ஐ. தலைவர் பதவியில் இருந்து சீனிவாசன் ஒதுங்கினார்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பி.சி.சி.ஐ.) சார்பில், சூதாட்டம் குறித்து விசாரிக்க ஓய்வுபெற்ற நீதிபதிகள் ஜெயராம் சவுதா, பாலசுப்ரமணியன் அடங்கிய இரு நபர் குழு அமைக்கப்பட்டது.

முடிவில், சூதாட்டம் நடந்ததற்கு போதிய ஆதாரம் இல்லை என்று விசாரணை குழு கூறியது. இதனை எதிர்த்து பீகார் கிரிக்கெட் சங்க (சி.ஏ.பி.) தலைவர் ஆதித்ய வர்மா சார்பில் பொதுநல வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதை விசாரித்த மும்பை உயர்நீதிமன்றம், விசாரணை அறிக்கை சட்ட விரோதமானது. புதிய குழு அமைத்து மீண்டும் விசாரிக்க வேண்டும் என்று தீர்ப்பு அளித்தது.

இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் பி.சி.சி.ஐ., சார்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது. அதில் ஐ.பி.எல் கிரிக்கெட் விதிப்படி தான், விசாரணைக்குழு அமைக்கப்பட்டது.

இதனால் உச்சநீதிமன்றத்தின் முழு விசாரணை முடியும் வரை மும்பை உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கு தடை விதிக்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்தது.

இந்த வழக்கு ஒகஸ்ட் 7-ம் திகதி உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஏ.கே.பட்னாயக், ஜே.எஸ்.கெகர் ஆகியோரது முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. மும்பை உயர் நீதிமன்றம் தீர்ப்புக்கு தடை விதிக்க உச்ச நீதிமன்றம் மறுத்தது.



இந்நிலையில் மும்பை உயர்நீதிமன்றத் தீர்ப்பை இதுவரை நிறைவேற்றாத பி.சி.சி.ஐ., மற்றும் சென்னை அணியின் உரிமையாளர் சீனிவாசனுக்கு உச்சநீதி மன்றம் நோட்டீஸ் அனுப்பியது.

பி.சி.சி.ஐ., மற்றும் பீகார் கிரிக்கெட் சங்க மனு மீதான விசாரணையை செப்டம்பர் 11-ம திகதிக்கு தள்ளிவைத்தது.

## மாவோயிஸ்ட்....

ஒத்துழைப்பை வழங்கியது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

காத்மண்டுவில் நடைபெற்ற பயிற்சி வேலைத்திட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே மேற்படி மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் இயக்கத்தின் தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

புலிகள் இயக்கத்துடன் தொடர்புகளைப் பேணியதாக, மேற்படி தீவிரவாத இயக்கம் ஒத்துக் கொண்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். இவ்வியக்கத்தின் தலைவர், கடந்த 2008-ம் ஆண்டில் நேபாளின் பிரதமர் பதவியை வகித்தவராவார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமானது ஒரு சுதந்திரமான இயக்கம் என்று அவ்வியக்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் நேபாளின் மாவோயிஸ்ட் தீவிரவாத இயக்கத்தலைவர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார் என்று "ஹிமாலயன் ரைம்ஸ்" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (எ-8)

## ஜனாதிபதி....

9ஆம் திகதி வவுனியாவில் நடைபெறும் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் ஜனாதிபதி, எதிர்வரும் 14-ம் திகதி மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெறும் கூட்டங்களில் பங்குகொள்வார். அத்துடன், 15ஆம் திகதி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும் கூட்டத்தில் அவர் கலந்து கொண்டு உரையாற்றுவார்.

தேர்தல் வன்முறைகள் குறித்து அமைச்சர் பிரேமஜயந்தவிடம் கேட்டபோது,

தேர்தல் ஆணையாளரினால் வழங்கப்பட்டுள்ள தேர்தல் நடைமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். (எ-8)

## வடக்குக்கு வருகை....

வெளிநாட்டுக் குழுவினர் மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள், இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக நடவடிக்கைகள் சிலவற்றை முன்னெடுக்க நேரம் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில், இவ்வாறு வடக்குக்குச் செல்லும் வெளிநாட்டவர்கள் எங்கு செல்கிறார்கள் என்பது தொடர்பில் விரிவாகக் கண்டறிய வேண்டும். வர்த்தக நோக்கத்துடன் வடக்குக்கு வருகை தரும் இந்தியர்கள், சுற்றுலா நுழைவு அனுமதியுடனேயே வருகின்றனர். அவ்வாறான சுற்றுலா நுழைவு அனுமதியுடன் வருபவர்கள் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது.

ஆயினும், வடக்கில் பெண்களைக் கவரக்கூடிய பொருட்களைக் கொண்டுவந்து வர்த்தக நோக்கம் என்ற பெயரில் இவர்கள் சுற்றித் திரிகின்றனர். இலங்கையில் தங்கியிருக்கக் கூடிய காலத்தைக் கடந்தும் அவர்கள் அங்கு தங்கியிருக்கின்றனர்.

இதனால், இவர்கள் தொடர்பில் பாரிய தொரு சந்தேகம் எழுந்துள்ளது. இவர்கள் இந்திய புலனாய்வு அதிகாரிகள். வடக்கில் நிலவரத்தைக் கண்டறிவதற்காக வர்த்தகர்கள் என்ற போர்வையில் இங்கு வந்துள்ளனர்.

இதனால், இவ்வாறானவர்கள் ஓமந்தை சோதனைச் சாவடிய்யக் கடந்து செல்லும் போது மிகக் கவனமாக சோதனையிடப்பட வேண்டும்" என்று வன்னி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா மேலும் தெரிவித்துள்ளார். (எ-8)

## துவாரகேஸ்....

நகரிலுள்ள அவரது கட்சி அலுவலகம் மீதே நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் தாக் குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கழிவு ஒயில் வீசியும், அலுவலகக் கண்ணாடிகளை உடைத்தும், கதவுகளை சேதப்படுத்தியும் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல்களால் அவை பலத்த சேதமடைந்துள்ளதாக துவாரகேஸ்வரன் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (எ-6,8)

## ஐ.நா.ஆணையா....

தெரிவித்தார்.

மனித உரிமை ஆணையாளர் விடுதலைப்புலிகள் தொடர்பில் கடுமையான விமர்சனத்தை முன்வைத்துள்ளார் என்பதை சகலரும் மறந்து விடுகின்றனர்.

நவநீதம்பிள்ளையை இலங்கைக்கு அழைத்து, அவர் பிரதேசங்களுக்கு விஜயம் செய்து நிலைமைகளைக் கண்டறிய அவருக்கு வாய்ப்பை வழங்கியதானது இலங்கை அரசின் வெளிப்படைத்தன்மையைக் காட்டியுள்ளது.

அவர் இலங்கைக்கு வந்து பெற்றுக் கொண்ட அனுபவங்களின் அடிப்படையில் அவர் கூறியவற்றுக்கு அரசாங்கம் பதிலை வழங்க வேண்டும்.

ஊடகவியலாளர் மாநாட்டில் ஆணையாளர் தெரிவித்த விடயங்களை ஏற்றுக்கொள்வதானால் ஏற்றுக் கொள்ளவும் நிராகரிப்பதானால் அதற்கான காரணங்களை அரசாங்கம் முன்வைக்க வேண்டும்.

அவரது கருத்துக்களுக்கு பதிலளிக்கும் போது, அரசாங்கம் அனைத்தையும் நிராகரித்தால், அதனை மனித உரிமை ஆணைக் குழுவில் உள்ள சகல உலக நாடுகளும் ஏற்றுக் கொள்ளாது.

நவநீதம்பிள்ளை கடந்த காலத்தை போல், போர்க்குற்றம் என்ற மந்திரத்தை உச்சரிக்கவில்லை எனவும் போர்க்குற்றம் குறித்து விசாரணை நடத்த ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் எனவும் கூறவில்லை.

நடந்துள்ள குற்றங்கள் தொடர்பில் தேசிய ரீதியில் நடத்தப்படும் விசாரணைகளுக்கு தேவையானால் மனித உரிமை ஆணைக் குழு உதவும் என்று அவர் கூறியுள்ளார்.

அப்படியான தேசிய ரீதியில் விசாரணைகளை நடத்தாவிட்டால், அரசாங்கத்தின் போராட்ட கோஷம் சர்வதேசத்தில் எடுப்படாது என அவர் தெரிவித்தமையானது இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணைகளுக்கான ஏதுநிலைகள் இருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது.

இதனடிப்படையில் இலங்கை அரசாங்கத்திற்கு தற்போது முதல் எதிர்வரும் மார்ச் மாதம் வரை கால அவகாசம் இருக்கின்றது. இதனால் நீதிமன்ற செயற்பாட்டின் ஊடாக அரசாங்கம் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது சிறந்தது.

இலங்கைக்கு எதிராக எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு மார்ச்மாதம யோசனை ஒன்று கொண்டு வருவதைத் தவிர்க்க இது போதுமானதாக இருக்கும் என்றார். (எ-8)

## நவநீதம்....

விடுமுறை விடுதிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை பற்றிய முறைப்பாடுகளும் கிடைத்தன.

அரசாங்கம் இந்த பிரச்சினையில் இறுக்கமான பிடியை கொண்டிருப்பதால், இந்த பிரச்சினையை தீர்ப்பதில் கடும் சிக்கல்களை எதிர்நோக்க நேரிடும்.

சில இராணுவ முகாம்கள் இருக்க வேண்டும், போருக்கு பின்னர், நோய்த் தாக்கம் போன்ற நிவாரண நடவடிக்கைகள், மறுசீரமைப்பு பணிகளுக்கு இராணுவம் தேவை.

பெண்களும், சிறுமிகளும் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுவது, வீடுகளில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் பெண்கள் பாதிக்கப்படும் சம்பவங்கள் தொடர்பில் அதிகளவில் அக்கறை செலுத்தப்பட வேண்டும்.

பாலியல் துஷ்பிரயோகம் ஒரு சகிப்புதன்மையற்ற செயல் எனவும் இது தொடர்பாக பல அமைச்சர்கள், மாகாண ஆளுநர்கள், பாதுகாப்புச் செயலாளருடன் நடைபெற்ற சந்திப்பின் போது, கலந்து கொண்ட இராணுவ உயர் அதிகாரிகளிடம் இந்த விடயம் தொடர்பாக கேள்வி எழுப்பியதாகவும் நவநீதம்பிள்ளை தெரிவித்திருந்தார் என்றார். (எ-8)


திருமணத் தேவைக்கான
கார் வாடகைக்கு விடப்படும்



தொடர்புகளுக்கு:
0771950228,
021 222 8984
0776152992
இல.44, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (C-4543)

திசைகாட்டி காலை
8.30 - பி.ப 6.30 வரை
எல்லா நாட்களும் (சனி, ஞாயிறு உட்பட) மேற்படி நேர அட்டவணையின் பிரகாரம் திசைகாட்டி இயங்கும்
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021 2219016, 0215689090
(C-4554)

காணி விற்பனைக்கு
யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பலாலி வீதிக்கருகாமையில் அமைதியான சுற்றாடலில் குடியிருப்புக்கேற்ற நிலப்பரப்பு பத்து (10) விசாலமுள்ள ஆதனம் முழுமையாகவோ பிரித்தோ விற்பனைக்குண்டு.
தரகர்களைத் தவிர்க்கவும்.
தொடர்புகளுக்கு:0755034930
(3821)

விசிற் விசா, மறுக்கப்பட்ட விசா, SPONSOR
எல்லா நாடுகளிற்கும்
பல வெற்றிகளைத் தேடித்தந்த
விசா விற்பன்னர்களின்
சட்ட ஆலோசனை
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021 2219016, 0215689090
(C-4554)

கார் விற்பனை
தனிப்பாவனையிலிருந்த
TOYOTA COROLLA
121 CAR
விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு-0777173414
(3833)

துரித மீட்டல் வகுப்பு
(ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்)
LOGIC - 2014
செவ்வாய், புதன் - 3.45 PM
எஸ். எஸ். மனோகரன்
BEACON யாழ்நகர் (வெலிங்டன் சந்தி)
(3838)

Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்
பொதி விநியோக சேவை
விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்
62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 0212224040 / 0772931062
(C-4455)

வடக்கு மாகாணசபைத் தேர்தல் - 2013





ஈழமக்கள் ஜனநாயக கட்சியின்
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்
சுந்தரம் டிவகலாலா
முன்னாள் செயலாளர், கல்வி, பண்பாட்டு, விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம்.
கல்வியின் ஊடாக அரசியல், சமூக, பொருளாதார மேம்பாடு.

அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச்சங்கம் வ-து வட்டுக்கோட்டை
அங்கத்தவர்கள் கவனத்திற்கு
எமது முந்திய விளம்பரங்களின் படி இதுவரை அங்கத்தவர்க்கான மேலதிக பணங்களைப் பெறாதவர்களும் அங்கத்துவப் புத்தகங்கள் வைத்திருந்து இதுவரை முன்பு பணங்களைப் பெறாதவர்களும், அடகு நகைகளை மீளப்பெறாத வன்னிப்பகுதி அங்கத்தவர்களும் 03.09.2013, 04.09.2013, 05.09.2013 ஆகிய திகதிகளில் நேரில் வந்து பணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். அடகு நகைகளையும் மீளப்பெறலாம். அதற்கான சான்றாதாரங்களுடன் வர வேண்டிய இடம்: டாக்டர் வி.சுந்தர்மூர்த்தி அவர்களின் அரவிந் கிளினிக் தபாற்கந்தோர் முன்புறம் விசுவமடு.
இ.ஆனந்தராசா
நிர்வாக செயலாளர் தொலைபேசி இல:0771495631
(3820)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074
Evening & Weekend Classes for Employees also available..
Batch1 : 02.09.2013
Batch2 : 07.09.2013
Batch3 : 09.09.2013
Batch4 : 14.09.2013

2 இலட்சம் வேதனம், உணவு, இருப்பிடம் இலவசம்
ஐரோப்பிய நாடான Holland (நெதர்லாந்தில்)
படிக்க, உழைக்க சட்ட ஆலோசனை
(எல்லா நாட்களும் காலை 8.30 - மாலை 6.30 வரை)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021 2219016, 0215689090
(C-4558)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.